EMS வைத்தியசாலை மட்டக்களப்பு
நவீன வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனை
விசேட வைத்திய நிபுணர் ஆலோசனைகள்
நவீன ஸ்கானிங் வசதிகள் (CT ஸ்கான், X-RAY, அல்டராசவுண்ட் ஸ்கான்)
தனிப்பட்ட நோயாளர் தங்கும் அறைகள் (STANDARD,LUXARY, SURGERY CARE)
தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் குருதி சுத்திகரிப்பு பிரிவு


n 010, d l tm n c, c, n
5 111 77 6 556 6008

Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

EMS வைத்தியசாலை மட்டக்களப்பு
நவீன வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனை

- சர்வதேச தரநிலை ஆபரேஷன் தியேட்டர்
- உயர்தர ஆய்வக சேவைகள் (Laboratory)
- அவசர சிகிச்சை பிரிவு (ETU)
- 24 மணி நேர மருந்தகம் (Pharmacy)
- அம்புலன்ஸ் சேவை
- 24 மணி நேர வெளி நோயாளர் பிரிவு (OPD)

n 010, d l tm n c, c, n
5 111 77 6 556 6008

மலர் : 03, இதழ்: 221 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(28.04.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 07, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.50

# அமெரிக்காவுக்குள் நுழைய கரன்னாகொடவுக்கு தடை!




(நமது நிருபர்)

வடமேல் மாகாண ஆளுநரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான வசந்த கரன்னாகொட மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஐக்கிய அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடைவிதித்துள்ளதாக அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களம் நேற்றுமுன்தினம் (26) உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

வசந்த கரன்னாகொட, கடற்படைத் தளபதியாக பதவி வகித்த காலத்தில் கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதன் காரணத்தால், வெளிநாட்டுச் செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் ஒதுக்கீட்டுச் சட்டம், 2023இன் பிரிவு 7031(இ)இன்படி, அமெரிக்காவுக்குள் நுழைய தடைவிதிக்கப்படுவதாக இராஜாங்க திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, “இந்த நடவடிக்கையின் விளைவாக, கரன்னாகொட மற்றும் அவரது மனைவி ஸ்ரீமதி அசோக கரன்னாகொட ஆகியோர் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தகுதியற்றவர்கள்” என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “வசந்த கரன்னாகொட மனித உரிமை மீறலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு,...

02 பக்கம்

**போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டி இராஜாங்க திணைக்களம் அதிரடி**



## ஒருதலைப்பட்ச நடவடிக்கை

### அமெரிக்காவிடம் கவலையை வெளியிட்டது இலங்கை

(நமது நிருபர்)

வடமேல் மாகாண ஆளுநரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான வசந்த கரன்னாகொடவுக்கு அமெரிக்கா விதித்துள்ள தடை தொடர்பில் அந்நாட்டுத் தூதுவர் ஜூலி சங்கிடம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

மேலும், இந்தத் தீர்மானத்தை மறுப்பதாகவும் தூதுவரிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நீண்டகால இருதரப்புப் பங்காளி என்ற வகையில்...

02 பக்கம்

## தகாத வார்த்தைப் பிரயோகம்; சபையில் மன்னிப்பு கேட்டார் சப்ரி

(நா. தினுஷா)

இனவாதம் என்றவொன்றை உருவாக்கி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கிடையில் விரோதத்தை ஏற்படுத்தி கீழ்த்தரமான அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சிக்கிறார்கள். ஆனால், மக்களுக்கிடையில் விரோதத்தை ஏற்படுத்தி அரசியல் செய்யவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. தொடர்ந்து நான் அரசியலில் இருக்கவேண்டிய அவசியமும் இல்லை. பாராளுமன்றத்தை விட்டு உடனடியாக வெளியேற என்னால் முடியும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பாராளுமன்றத்தில் நேற்று (27) தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கூறுவது போன்று, தனது உரையில் பாராளுமன்றத்துக்கு பொருத்தமற்ற மொழி பிரயோகங்கள் இருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருவதாகவும் அவ்வாறான வார்த்தைகளை மீளப்பெற்றுக்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது இராசமாணிக்கம் சாணக்கியன், பாராளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றினார்.

இந்த பாராளுமன்றத்தில்...

02 பக்கம்

## ஐ.எம்.எவ். வாக்கெடுப்பில் இ.தொ.கா. ஆதரவளிக்கும்

### அமைச்சர் ஜீவன் நேற்று அறிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கான தீர்மானத்துக்கு தமது கட்சி ஆதரவாக வாக்களிக்கும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை, அமைச்சர் மனுஷ நாணயக்கார சபையில் ‘கொட்டியா’ (புலி) என விளித்ததையும் அமைச்சர் கண்டித்துள்ளார்.

கொழும்பில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (27) நடைபெற்ற...

02 பக்கம்



இலங்கை மத்திய வங்கியின் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவினால் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கை அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிதியமைச்சில் வைத்து நேற்று (27) கையளிக்கப்பட்டது.




வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆளுநர்மாரை மாற்றுவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளை நடத்தியதாக தகவல்.

கிழக்கில் தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகள் தொடர்பில் இங்கு பேசப்பட்டுள்ளது. அந்த மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களில் நியமிக்காமல் சிங்களவர் ஒருவரையே மீண்டும் நியமிக்குமாறும் ஜனாதிபதிக்கு ஆலோசனை சொல்லப்பட்டுள்ளதாம். வடக்கிலும் அப்படியான தீர்மானத்தை அமுல்படுத்தவே உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

## அகற்றப்பட்ட சிலைகளை மீண்டும் பிரதிஷ்டை செய்க

### வவுனியா நீதிமன்றம் உத்தரவு; வழிபாடுகளும் ஆரம்பம்



(சி. திவியா)

வவுனியா, வெடுக்குநாறிமலையிலிருந்து அண்மையில் அகற்றப்பட்ட சிலைகளை மீண்டும் அங்கு பிரதிஷ்டை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று (27) தெரிவித்தார்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அகற்றப்பட்டமை தொடர்பான வழக்கு வவுனியா...

02 பக்கம்

## மாத்தளையில் 85 எயிட்ஸ் நோயாளர்கள்

(எம்.எஸ்.எம். மஸாஹிம்)

மாத்தளை மாவட்டத்தில் 85 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் (26) இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவரும் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நாலக பண்டார கோட்டகொட தலைமையில் மாத்தளை...

02 பக்கம்

**கமெண்ட் கந்தர்...**

அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தடைவிதிச்சா படகிலயாவது கள்ளமா போகலாம்... அமெரிக்காவுக்கு எப்படிங்கோ அப்படிப்போறது..?



## 06 முஸ்லிம் அமைப்புகள் விரைவில் தடை நீக்கம்

### ஜனாதிபதி உறுதியளித்ததாக ஹரீஸ் எம்.பி. அறிவிப்பு

09 பக்கம்

## அரசுக்கு எதிராக மே தினக் கூட்டம்

### ஆயத்தப் பணிகளில் தொழிற்சங்கங்கள்

(நா. தினுஷா)

அரசாங்கத்தின் வரிக்கொள்கை, அரசநிறுவனங்களை தனியார்மயப்படுத்தல், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் உள்ளிட்ட...

02 பக்கம்

## ஊழல் அரசுடன் ‘டீல்’ கிடையாது

### சஜித் சபையில் தெரிவிப்பு

வரிக்கு மேல் வரி விதித்து மக்களை ஒடுக்கும் ஊழல் நிறைந்த அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியினரோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரும் கைகோர்க்க மாட்டார்கள் எனவும் இந்நாட்டை கொள்ளையடித்து, ஏமாற்றி, ஏலம் விட்டு, குடும்ப ஆட்சி நடத்தும் நபர்களுடன் எந்நிலையிலும் ஒன்றிணைந்து ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ள மாட்டோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

டொலர் திருட்டில் ஈடுபட்டவர்கள், இந்த நாட்டிலிருந்து...

02 பக்கம்



திருகோணமலை, புல்மோட்டை, அரிசிமலை, பொன்மலைக்குடா, குச்சவெளி, திரியாய் ஆகிய பகுதிகளில் நிலவும் காணிப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து நேற்று (27) கலந்துரையாடியது. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார். (திகாமடுல்ல செய்தியாளர்)

# புதிதாக பிறக்கும் குழந்தைகள் தொடர்பில் அவதானம் தேவை

## அதிக வெப்பநிலை தொடர்பில் வைத்திய நிபுணர் தீபால் தகவல்



நாட்டில் அண்மைக்காலமாக நிலவும் அதிக வெப்பத்தின் காரணமாக சிறுவர்கள் பல்வேறு உடல் ரீதியான அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள். குறிப்பாக, புதிதாக பிறந்த குழந்தைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதம் தாய்ப்பால் கொடுப்பது அவசியம் என்பதுடன், ஆறு மாதம் நிறைவடைந்த குழந்தையெனில் தற்போதைய நாட்களில் அவர்களுக்கு அதிகளவு நீர் அருந்த கொடுக்குமாறு சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

வெப்பம் உயர்வடைந்து உடல் நீரிழப்பு அதிகரிக்கும்போது வலிப்பு, மயக்கம், உணவு உண்பதில் விரக்தி, நித்திரையின்மை, சோர்வு போன்ற அசௌகரிய நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எதிர்வரும் நாட்களில் காலையில் அதிகளவு வெப்பநிலை பதிவாகக்கூடும். 32 செல்சியஸ் அளவில் வெப்பம் பதிவாகலாம். அதனால், உடல்நிலை பாதிப்புகள் அதிகரிக்கலாம். குறிப்பாக, சிறுவர்களுக்கும் அதிகளவு உடல்நிலை பாதிப்புகள் ஏற்படலாம்.

புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு வெப்பம் ஏற்றதாகவே இருக்கும். ஆனால், முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மாத்திரம் போதுமானதாக இருக்கும். ஆறு மாதங்களின் பின்னர் குழந்தைகளுக்கு அதிகளவு நீர் அருந்தக் கொடுக்கவேண்டியது அவசியமாகும். உடம்பிலிருந்து அதிகளவு வியர்வை வெளியேறுவதால், உடல் நீரிழப்பு அதிகம் இடம்பெறும். அதன் காரணமாகவே உடற்பாதிப்புகள் ஏற்படும்.

சோர்வு, நித்திரையின்மை, உணவு வெறுப்பு, வாந்தி போன்ற நிலைமைகளும் ஏற்படக்கூடும். மேலும், மயக்கநிலை, வலிப்பு போன்ற நோய் நிலைமைகளும் ஏற்படக்கூடும். எனவே, முறையான நீர் அருந்தவேண்டியது அவசியமாகும். பிற்பகல் 1.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை அதிகளவு வெப்பம் பதிவாவதால் அந்தக் காலப்பகுதியில் திறந்த வெளியில் விளையாட்டு நடவடிக்கைகள், தொழிற் செயற்பாடுகளை முன்னெடுப்பதை தவிர்த்துக்கொள்வது சிறந்ததாக இருக்கும்.

குறிப்பாக, சிறுவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். அவர்களின் உடம்பில் ஏற்படும் அசௌகரியத்தை வெளிப்படுத்த முடியாது என்பதால் அழுதல், பால் அருந்துவதை நிறுத்துவது, உணவு உண்பதில் வெறுப்பை வெளிப்படுத்துவார்கள். அதனால் மேலும் பக்கவிளைவுகள் ஏற்படக்கூடும் - என்றார்.



வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதியளித்து நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து நேற்று (27) பூஜைகள் இடம்பெற்றன. ஆலயத்தில் ஆதிலிங்கம் உள்ளிட்ட ஏனைய விக்கிரகங்கள் அடையாளந்தெரியாதோரால் தகர்க்கப்பட்டதையடுத்து பூஜைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஊழல் ஒழிப்புச் சட்டமூலம் சமர்ப்பிப்பு

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் நேற்று (27) சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்ற அமர்வு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் நிறைவடைந்த பின்னர் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இந்தச் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்தார்.

### ஒருதலைப்பட்ச...

உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் அமெரிக்காவின் இத்தகைய ஒருதலைப்பட்ச நடவடிக்கையானது தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்திசெய்வதில் இலங்கை எடுத்துள்ள முழுமையான அணுகுமுறைக்கு எதிரானதென வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் ஜனநாயக ஆட்சி மற்றும் நல்லிணக்க கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள உறுதியான முன்னேற்றத்தின் பின்னணியில் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை துரதிர்ஷ்டவசமானது எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சவால்கள் இருந்தபோதிலும் நல்லிணக்கம், பொருளாதார மீட்சி மற்றும் சமூக - பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கான இலங்கையின் முயற்சி தொடரும் எனவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

### அகற்றப்பட்ட...

நீதவான் நீதிமன்றத்தில், நீதவான் தேவராசா சுபாஜினி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்கனவே நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், நேற்றைய தினம் அங்கு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும், விக்கிரகங்களின்றி அங்கு வழிபாடுகள் நடத்தப்பட்டமை தொடர்பிலும், வெடுக்குநாறிமலையிலிருந்த திருவுருவச் சிலைகள் மற்றும் பூஜைப் பொருட்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த வவுனியா நீதவான், வெடுக்குநாறிமலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட விக்கிரகங்களை அதே இடத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்யுமாறும், பூஜைப் பொருட்களை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் திருவுருவச் சிலைகள் மீள பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், பூஜை வழிபாடுகளுக்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்காதிருப்பதற்கும், அங்கு பாதுகாப்பு மேற்பார்வைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும் பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெடுக்குநாறிமலையிலிருந்த விக்கிரகங்கள் சேதப்படுத்தியமையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதை துரிதப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

### அமெரிக்காவுக்குள்...

அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சுயாதீன விசாரணைகளால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இது தீவிரமானது மற்றும் நம்பகமானது.

வசந்த கரன்னாகொடவை தடைசெய்வதன் மூலம், மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் மனித உரிமைகளை மீறுபவர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்களிப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப்பிழைத்தவர்களின் துன்பங்களை ஒப்புக்கொள்வதற்கும் இலங்கையில் குற்றவாளிகளுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கும் அமெரிக்கா தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

அமெரிக்காவுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவு 75 வருட பகிரப்பட்ட வரலாறு, மதிப்புகள் மற்றும் சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலானது.

எமது இருதரப்பு உறவை நாம் தொடர்ந்து கட்டியெழுப்பும்போது, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் உறுதி பூண்டுள்ளோம். வளர்ந்து வரும் பாதுகாப்புக் கவலைகளை சரியாக நிவர்த்தி செய்யுங்கள்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் ஆளுநரான ஓய்வுபெற்ற அட்மிரல் வசந்த கரன்னாகொடவை மனித உரிமை மீறல்களுக்காக அமெரிக்காவுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டவர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கை உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமெரிக்கா தொடர்ந்து உண்மையையும் நீதியையும் தேடுகிறது என்று இராஜாங்க செயலாளர் என்டனி ஜே. பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

### மாத்தளையில்...

மாவட்ட செயலக வீரகெப்பிட்டிபொல மண்டபத்தில் இடம்பெற்றபோது கருத்து தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் ஹிருக்கா ராஜபக்ஷ தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், எயிட்ஸ் நோய் இம்மாவட்டத்தில் அநேகமாக ஓரினச் சேர்க்கையாளர்களிடமே காணப்படுவதாகவும் இவர்களுக்கான மருத்துவ செயற்பாட்டினை அதிகரிக்கச் செய்து அதிகரித்து வரும் எயிட்ஸ் நோயாளிகளை கட்டுப்படுத்திட பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை, சீகிரியா போன்ற சுற்றுலா வலயங்களிலும் இப்பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கும் மசாஜ் நிலையங்களிலும் ஓரினச்சேர்க்கையாளர்கள் சம்பந்தமாக பூரண விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் இவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி இரகசியமாகவே செயற்பட்டு வருவதாகவும் தற்பொழுது இம்மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள எயிட்ஸ் நோயாளிகளுக்கு வைத்திய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் விசேட வைத்திய நிபுணர் ஹிருக்கா ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க மத்திய மாகாண தலைவர் எல்.டீ.நிமலசிறி, மத்திய மாகாண செயலாளர் காமினி ராஜரத்ன, மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### அரசுக்கு எதிராக...

பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிற்சங்கங்களின் ஒன்றியம் எதிர்வரும் முதலாம் திகதி மாபெரும் மே தின கூட்டமொன்றை நடத்த எதிர்பார்த்துள்ளது.

அந்தக் கூட்டத்தின் பின்னர் மீண்டும் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்கவும் தமது எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து மக்களை தெளிவுப்படுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவுள்ளதாக மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அநீதியான வரிக் கொள்கைக்கு எதிராகவே சகல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்தோம். இந்த வரிக் கொள்கை தொடர்பில் எங்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கும் அரசாங்கத்தரப்பிலிருந்து எந்தவொரு சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. பிரச்சினைக்கு தீர்வுக் கிடைக்காததால் எங்கள் தொழிற்சங்க ஒன்றிணைவில் எந்த மாற்றமும் ஏற்படாது. எங்களின் செயற்பாடுகளும் நிறைவுக்கு வராது.

வரிக் கொள்கைக்கு அப்பால் நிறுவன மறுசீரமைப்பு நடவடிக்கைகள், தனியார் மயப்படுத்தல், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் போன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் எதிர்ப்பை தெரிவிக்க நேர்ந்தது. பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளிலிருந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விலகியிருந்த சந்தர்ப்பத்தில், அதற்கு பதிலளிக்காமல் அரசாங்கத் தரப்பு அநீதியான முறையில் செயற்பட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

எனவே, எதிர்காலத்தில் ஆட்சியாளர்களுக்கு அழுத்தத்தை பிரயோகிக்க எதிர்பார்த்துள்ளோம். அரச ஊழியர்களை ஒதுக்கிவிட்டு நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். அரசாங்கம் ஒரு புறமும், அரச ஊழியர்கள் ஒருபுறமும் செல்லும் நிலையே நாட்டில் நிலவுகின்றது. இந்த அரசாங்கம் மக்களை கனவு உலகத்துக்குள் வைத்திருக்கிறது என்பது அவர்களுக்கு புரியவில்லை. கனவு கலையும் போதே அதன் தன்மை மக்களுக்கு தெரியவரும்.

ஆனால், மக்களை அவ்வாறு கனவுலகில் மூழ்கடிக்க முடியாது. எனவே, எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரிடும். முதன்முறையாக முதலாம் திகதி தொழிற்சங்க ஒன்றியங்களின் மே தினக் கூட்டமொன்றை நடத்த எதிர்பார்த்துள்ளோம். அதன் பின்னர் எங்களின் எதிர்ப்பு செயற்பாடுகள் குறித்து அறிவிக்க மக்களுக்கு தெளிவுப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

### ஊழல் அரசுடன்...

அரச வளங்களையும், டொலர்களையும் திருடி அழித்தவர்கள், பண்டோரா பத்திரங்கள் மூலம் வெளிப்பட்ட மோசடிக்காரர்கள் இந்நாட்டிலோ அல்லது உலகின் எந்நாட்டிலோ இருந்தாலும் எத்தகைய தகுதி தராதரங்களும் பார்க்காமல் இந்நாட்டின் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும், அவ்வாறு திருடப்பட்ட பணம் மீண்டும் நாட்டுக்குள் கொண்டு வரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தி தற்போதைய அரசாங்கத்துடன் இணையும் என ஜனாதிபதி நினைத்துக் கொண்டிருந்தால் அது வெறும் கற்பனையே. நாட்டை அழித்த ராஜபக்ஷர்களுடன் தமக்கோ அல்லது தமது கட்சிக்கோ எந்தவித தொடர்புமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (27) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்கள் மீது வரி விதிப்பதாகப் பேசும் தற்போதைய அரசாங்கம், பண்டோரா பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தையும் வளங்களையும் எவ்வாறு எமது நாட்டுக்குத்திரும்பப் பெறுவது என்பதில் இதுவரை கவனம் செலுத்தவில்லை. ஆனால், இழந்த வளங்களை மீட்பதற்கான சட்டமும் அதிகாரமும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அமுல்படுத்தப்பட்டு பணம் மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவரப்படும்.

அரசாங்கம் முன்வைத்துள்ள ஊழல் ஒழிப்புச் சட்டமானது சமகாலம் மற்றும் எதிர்காலம் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட்டு முன்வைக்கப்பட்டபோதிலும், கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் போன்ற நிதி மோசடிகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதில் குறிப்பிடப்படவில்லை. கடந்த காலங்களில் இடம்பெற்ற சீனி, எரிவாயு, எரிபொருள் மோசடிகளை மறக்க முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வெளிநாடுகள் இதுபற்றி பேசினாலும் அதனை நாம் கவனத்தில் கொள்ளாதது பாரிய பிரச்சினைக்குரிய விடயமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தை நாடியது நல்லதுதான் என்றாலும் அவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வந்த ஒப்பந்தங்கள் தவறானவை. இந்த உடன்படிக்கைகளில் மக்களைப் பாதிக்கும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அவை திருத்தப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தை கையாள்வது நாட்டுக்கு நன்மைகளை பயக்கும் விதமாகவே தவிர, நாட்டை மேலும் படுகுழியில் இட்டுச் செல்வதாக அமையக்கூடாது.

சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்ல மறுத்த குழுவினர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை இன்று விதியின் கேலிக்கூத்தாக மாறியுள்ளது.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி உட்பட தான் சர்வதேச நாணய நிதியத்தை கையாள்வதன் அவசியத்தை பலமுறை வெளிப்படுத்திய போதும் அதனை கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான மொட்டு அரசாங்கம் முற்றாக நிராகரித்தது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

### தகாத வார்த்தைப்...

இலங்கை தொடர்பிலேயே பேசுகின்றேன். மட்டக்களப்பு மாவட்டமும் இலங்கையில் ஒரு மாவட்டமாகும். அத்துடன், நான் ஒரு பிரிவினைவாதி, மதவாதி என்று அமைச்சர் அலி சப்ரி என்னைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் பாராளுமன்றத்துக்கு பொருத்தமானது இல்லை. வெளிவிவகார அமைச்சர் என்னை இங்கு தேவையற்ற விதத்தில் விமர்சித்துள்ளார். நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவன்.

எனினும், வெளிவிவகார அமைச்சர் தேசியப் பட்டியல் உறுப்பினராவார். எனது மக்கள் சார்பாக அவர்களது பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் எழுப்புவதற்கான கடப்பாடும் பொறுப்பும் எனக்குக் காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட நபரை திருப்திப்படுத்துவதற்காக அவர் நியமிக்கப்பட்டு இருக்கலாம் என்று குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தன்னைக் குறித்து அமைச்சர் அலி சப்ரியால் தெரிவிக்கப்பட்ட பாராளுமன்றத்துக்கு பொருத்தமற்ற கருத்துக்கள் குறித்து சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

அதற்கு பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு மன்னிப்புக் கோரினார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் முக்கியத்துவத்தை விளக்க முயற்சிக்கிறார். 2015ஆம் ஆண்டு அவர் ராஜபக்ஷக்களின் முகாமில் போட்டியிட்டிருந்தார். ராஜபக்ஷக்களுக்கு இருக்கும் பலத்தைக்கொண்டு தேர்தலில் வெற்றியடைய வேண்டிய அவசியம் அவருக்கு இருந்தது. அது தோல்வியிலேயே நிறைவடைந்தது. 3000 வாக்குகளையே பெற்றுக்கொண்டார். அதனை தொடர்ந்து ராஜபக்ஷக்களுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தார்.

தேர்தல் ரீதியில் அரசியலினூடாக மக்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தி வாக்குகளை பெற்றுக்கொள்ளவே முயற்சிக்கிறார்கள். என்னாலும் அதனை இன்றே செய்ய முடியும். இன்றே வீதிக்கு இறங்கி சிங்கள மக்களுக்கு எதிராக குரல் கொடுத்தால் முஸ்லிம் மக்கள் எனக்கு வாக்களிப்பார்கள். சிங்கள தேர்தல் முகாமில் இணைந்து முஸ்லிம் மக்களுக்கு எதிராக கருத்து வெளியிட்டால் சிங்கள மக்கள் எனக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். இதனையே மக்கள் செய்வார்கள்.

ஆனால், ஒருபோதும் அதனை நான் செய்ய மாட்டேன். வீட்டுக்கே செல்வேன். இதுவே எனது அரசியல் செயற்பாடாகும். என்னாலும் முடியும்.

எனக்கு எப்போது நீதியமைச்சுப் பொறுப்பளிக்கப்பட்டதோ அப்போது, யுத்தக் காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள், எவ்வளவு பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் நீண்ட காலமாக தடுத்து வைத்துள்ளார்கள்? என்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளேன்.

இதுதொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதியிடமும் பேச்சுவார்த்தை நடத்தி 27 பேருக்குபிணை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு பிணை வழங்கவும் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இதுவே அரசியல் என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். ஆனால் இதனை நான் எங்கும் அறிவித்தது இல்லை.

ஆனால், இனவாதம் என்றவொன்றை உருவாக்கி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இடையில் விரோதத்தை ஏற்படுத்தி கீழ்த்தனமான அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவே முயற்சிக்கிறார்கள். நான் அதனை செய்ய மாட்டேன். தொடர முடியவில்லை என்றால் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறுவேன்.

கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷக்கள் தொடர்பில் பெருமை கொள்கிறேன். அவர்களே இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்தார்கள். எனக்கு அரசியல் முக்கியமில்லை. அரசியலில் நான் நீண்ட காலமாக இருக்கவும் போவதில்லை. இந்த பாராளுமன்றத்தில் இருப்பவர்களுக்கே அரசியல் முக்கியமாகும். நானொரு சட்டத்தரணி. என்னால் வெளியேற முடியும். எனது உரையில் பாராளுமன்றத்துக்கு பொருத்தமற்ற மொழி பிரயோகம் பயன்படுத்தப்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்புக் கோருகிறேன். அவற்றை மீளப்பெற்றுக் கொள்கிறேன் என்றார்.

### ஐ.எம்.எவ்...

ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ஜீவன் மேலும் கூறியவை வருமாறு,

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அவசியம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்தது. அந்தவகையில் ஐ.எம்.எவ். அமுல்படுத்துவதற்கான தீர்மானம் மீது பாராளுமன்றத்தில் நாளை (இன்று) வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. அரச பங்காளிக்கட்சி என்ற வகையில் அதற்கு ஆதரவு வழங்கப்படும்.

ஐ.எம்.எவ். கடன் குறித்து சிலர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். ஆனால் ஐ.எம்.எவ். அங்கீகாரம் கிடைத்ததால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள, ஏற்படப்போகும் நன்மைகள் பற்றி எவரும் கதைப்பதில்லை. எது எப்படி இருந்தாலும் நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் பொருளாதாரத் திட்டங்களுக்கு நிச்சயம் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

அதேபோல பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இதற்கு ஆதரவு வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிரணியில் உள்ள ஏனைய கட்சிகளும் ஆதரவு வழங்க முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை, அதி உயர் சபையாக கருதப்படுகின்ற பாராளுமன்றத்தில் எதிரணி உறுப்பினரை (சாணக்கியனை) அமைச்சர் (மனுஷ நாணயக்கார) 'கொட்டியா' (புலி) என விமர்சித்திருந்தார். இது தவறாகும். பாராளுமன்றத்தில் சபை நாகரீகம் பின்பற்றப்பட வேண்டும். ஒரு உறுப்பினரின் இனத்தை வைத்து அவரை விமர்சிப்பது ஏற்புடைய விடயம் அல்ல.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிக்கு ஆளுநர் பதவியை வழங்குமாறு நாம் கோரிக்கை விடுக்கலாம். அது எந்த மாகாணம் என்பதை ஜனாதிபதியே தீர்மானிப்பார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் சிறந்த நிர்வாகி. அவர் மாகாண துணை முதல்வராக செயற்பட்டுள்ளார். மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கியுள்ளார். மலையக தமிழர் ஒருவருக்கு ஆளுநர் பதவி கிடைப்பது மகிழ்ச்சி. இதற்கு அனைவரும் ஆதரவு வழங்குவார்கள் என நம்புகின்றேன்" - என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** – வீடு மற்றும் வாகனம் இவற்றால் லாபங்களை அடைவீர்கள். தாய்வழி உறவுகளின் உதவிகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**ரிஷபம்** – எதிர்பாராத வகையில் நண்பர் ஒருவரின் உதவி கிடைக்கும், மனத்துணிவுடன் காரியம் சாதிப்பீர்கள்.

**மிதுனம்** – பணக் கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த பிரச்சினை தீரும். குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக எல்லை மீறி செலவு செய்வீர்கள்.

**கடகம்** – உங்கள் புகழ், செல்வாக்கு உச்சத்தை தொடப் போகின்றது. தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் இனிதே நடந்தேறும்.

**சிம்மம்** – தொழில் நிமித்தம் அலைச்சலும், உடல் அசதியும் உண்டு. வெளிநாட்டு நன்மைகள், லாபங்கள் உண்டு.

**கன்னி** – எதிர்பாராத தன அதிர்ஷ்டம் உண்டு, தொழில் வியாபாரத்தில் நீங்கள் தான் இன்றைய சாதனையாளர்.

**துலாம்** – நீங்கள் நீண்ட நாள் திட்டமிட்ட காரியம் இன்று பலனளிக்கப் போகின்றது. தொழிலில் ஈடேற்றம் உண்டு.

**விருச்சகம்** – பூர்வீக சொத்துப் பிரச்சினை தீர்ந்து உங்களுக்குரிய பாகம் கிடைக்கும். ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக்கொள்வீர்கள்.

**தனுசு** – கவனக் குறையுடன் செயலாற்றினால் குறை கேட்க நேரிடும். மனதில் தேவையற்ற எண்ணங்கள் அலை மோதும்.

**மகரம்** – நீங்கள் விரும்பியவரை மணக்க பெற்றோர் சம்மதம் தெரிவிப்பர். கூட்டு முயற்சிகளில் அதிக லாபங்களைப் பெறுவீர்கள்.

**கும்பம்** – பழைய கடனை அடைப்பதற்கு புதுக் கடன் தொகை பெறுவீர்கள். சிரித்துச் சிரித்து கழுத்தறுக்கும் நபர்களிடம் எச்சரிக்கை வேண்டும்.

**மீனம்** – தொழில் ரீதியில் இருந்துவந்த சிக்கல்கள் தீர்ந்து நிம்மதி யடைவீர்கள். உங்கள் யோசனை இன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| **திதி** | : அஷ்டமி பி.ப.4.02 வரை பின் நவமி |
| **நட்சத்திரம்** | : பூசம் மு.ப.9.52 வரை பின் ஆயிலியம் |
| **யோகம்** | : மரண யோகம் |
| **வார சூலை** | : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : மு.ப. 5.55 – 6.55 மணி வரை |
| **ராகு காலம்** | : 10.25 – 11.55 மணி வரை |
| **எமகண்டம்** | : 2.55 - 4.25 மணி வரை |
| **குளிகை** | : 7.25 – 8.55 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | : பூசம்,அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : -------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீன தன்மைக்கு அச்சுறுத்தல்

## பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பெவ்ரல் அமைப்பு கோரிக்கை

பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத் தன்மையை பாதுகாத்தல் மற்றும் அதிகாரிகளின் சுயாதீனம் மற்றும் கௌரவத்தை பாதுகாத்துக்கொண்டு கடமையாற்றுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கோரி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு (பெவ்ரல்) அமைப்பு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

மேலும் அந்தக் கடிதத்தில்,

எந்தவொரு நாட்டிலும் பொலிஸ் திணைக்களம் என்பது அந்தந்த நாட்டின் சட்டம், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு என்பவற்றை உறுதிப்படுத்தும் ஒரு நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. இருந்தபோதும், பொலிஸ் திணைக்களத்தில் இருக்கும் அரசியல் தலையீடுகளின் காரணமாக அவர்களின் நடுநிலைத் தன்மை மற்றும் கௌரவம் என்பன பாதுகாக்கும் வகையில் செயற்படுவது தொடர்ச்சியாக சவாலுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்படும்போது அதிகாரத்திலிருக்கும் கட்சியின் தொகுதி ஒருங்கிணைப்பாளர்களின் விருப்பமின்றி அவர்களை தெரிவுசெய்ய முடியாதென்று தற்போதைய பொலிஸ் மா அதிபரே எழுத்துப்பூர்வமான அறிக்கையொன்றினூடாக சட்டம், ஒழுங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தமை அண்மையில் உறுதியாகியிருந்தது.

அதற்கு உதவும் வகையில் ஆனமடுவ பொலிஸ் நிலையத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு, தொகுதி அமைப்பாளர் பதவியை வகிக்கும் இராஜாங்க அமைச்சர் இணக்கம் தெரிவிக்காமையினால் குறித்த அதிகாரியை அங்கிருந்து நீக்க நடவடிக்கை எடுத்த சம்பவம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது.

அதேபோன்று கடந்த வாரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கோரிக்கையை பொருட்படுத்தாமையின் காரணமாக இரத்தினபுரி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் சில பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டமை அரசியல் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டதென்பது ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இந்த இடமாற்றம் தொடர்பில் ஆணைக்குழு பொறுப்புக் கூற வேண்டுமல்லவா? பொலிஸ் மா அதிபருக்கு அப்பாற்பட்டு பொதுமக்களின் நிதியில் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை இவ்வாறான நிலைமைகள் இடம்பெறாமல் பாதுகாத்து கொள்வதற்கல்லவா? அதேபோன்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்வது தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழு அனுமதியை பெற்றுக்கொடுத்ததா? அதற்காக நீதியாக காரணம் குறிப்பிடப்பட்டதா? அதற்காக பொலிஸ் மா அதிபரால் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை முன்வைக்கப்பட்டதா? அதேபோன்று இது அவ்வளவு அத்தியாவசியமான இடமாற்றமா?

அரசியல்வாதிகளின் தூரநோக்கற்ற ஆட்சியினால் நாடு பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், பொலிஸ் போன்ற நிறுவனங்களின் அதிகாரிகளின் சுயாதீனமாக செயற்படுவதற்கு இருக்கும் வாய்ப்புகள் இல்லாமல்போனால் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லாமல்போகும் என்பதுடன், அதன் இறுதி பிரதிபலன்கள் நாட்டின் எதிர்காலத்துக்கு பொருத்தமானதாக இருக்காது. அதனால், பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசியல் அச்சுறுத்தலின்றி சுயாதீன செயற்பாடுகளுக்குப் பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆயுர்வேத வைத்தியர் கழுத்தறுத்துக் கொலை

களுத்துறை வடக்கு, கெலிடோ வீதி பகுதியில் ஆயுர்வேத வைத்தியரான பெண் ஒருவர் கழுத்தை அறுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.


இரண்டு பிள்ளைகளின் தாயான 60 வயதுடைய குறித்த வைத்தியர் நேற்று அதிகாலை வெட்டுக்காயங்களுடன் வீட்டின் பின்புறமிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கத்தியொன்றும் வீட்டின் அருகாமையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது உயிரிழந்த பெண் சமையலறையில் மீன் வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் கத்தி எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத அதேவேளை, சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# கச்சதீவில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டது





கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டுவிட்டதாக ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

ஆயர் இல்லம் சார்பில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

இவ்விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள். அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சதீவுக்கு கொண்டுசெல்லப்பட்டுவிட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் தாங்கள் கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவன செய்யுமாறும் கேட்டு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் கடந்த மார்ச் 27இல் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்துவைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட குரல் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அதன் தற்போதைய வடிவில் முன்வைக்க வேண்டாம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை, அதன் தற்போதைய வடிவில் நாடாளுமன்றில் முன்வைக்க வேண்டாமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு தேசிய கலந்துரையாடல் முடிவடைந்து, தெளிவான திட்டத்துடன் அதன் பரிந்துரைகள் வெளியிடப்படும்வரை காத்திருக்குமாறும் ஆணைக்குழு கோரியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டமூலம் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் மேலும் ஆராயவேண்டியது அவசியமானதென மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்த சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் 30 வருடங்களுக்கும் மேலாக நீடித்த, பயங்கரமான உள்நாட்டுப் போரின் அழிவுகளின் கீழ் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு சமூகங்களுக்கு மாத்திரமல்ல என்றும் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

70 மற்றும் 80களில் தெற்கில் ஏற்பட்ட கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் இந்த செயல்முறை அவசியம், அவர்களில் பலர் எழுச்சி மற்றும் அரசின் பதிலளிப்புகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சமாதானம் மற்றும் நல்லிணக்க செயல்முறையை சமமாக எதிர்கொள்ளும் ஒரு தேசிய உரையாடலை நிறுவுவது, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துடன் ஒப்பிடக்கூடிய ஒரு சட்டமூலத்திற்கான சூழலின் அவசியத்தை சிறப்பாக வரையறுக்கும் என்பதை உறுதியானதெனக் கருதுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளது.

# விமலின் கருத்து அடிப்படையற்றது

## பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்சவால் தெரிவிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விளக்கமளித்துள்ளது.

தென் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நட்பு நாடுகளுக்கிடையே ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு மாநாடான கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நிலை கூட்டம் 2022 ஜூலை 07ஆம் திகதியன்று இந்தியாவில் நடைபெற்றது.

அப்போதைய ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டுதல் மற்றும் அனுமதியின் கீழ் இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி (CDS) மற்றும் முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் ஷவேந்திர சில்வா இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அக்கூட்டத்தில் பங்கேற்றார் என்பதை பாதுகாப்பு அமைச்சு வலியுறுத்துகிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் விமல் வீரவங்ச, 2022ஆம் ஆண்டு மே 09 அன்று நடைபெற்ற போராட்டத்தின் பின்னணியில் இருந்தவர்களின் முதல் திட்டம் அப்போதைய நிறைவேற்று ஜனாதிபதியையும் பாதுகாப்புத் தலைவர்களையும் ஜனாதிபதி மாளிகையில் வைத்து படுகொலை செய்வதே என்றும் ஜெனரல் சவேந்திர சில்வாவின் இந்திய விஜயம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதன்படி, மேற்படி கருத்து அடிப்படையற்றது எனவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் வலியுறுத்துவதுடன், பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அப்போதைய இலங்கை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பதை மேலும் வலியுறுத்துகிறது.

# ஒரே குடும்பத்தில் நால்வர் மீது வாள்வெட்டு

பெங்கமுவ, புஹுல்ஹேனே, வலகட பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத குழுவினர் 13 வயதுடைய பாடசாலை மாணவன், அவனது தாய், தந்தை உட்பட நால்வரை வெட்டிக் காயப்படுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஊருபொக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெங்கமுவ, தன்ஹேன, புஹுல்ஹென்வலகட பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குள் நேற்று முன்தினம் (26) இரவு 9.00 மணியளவில் புகுந்த சிலரே தாய், தந்தை, மகன் மற்றும் மகள் ஆகிய நால்வரையும் வெட்டி காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகத்தை மூடிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்த ஒரு குழுவினர் இவ்வாறு தாக்குதல் நடத்தியமை தொடர்பில் பொலிஸின் 119 அவசர இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் அங்கு சென்று காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இவர்களில் தாயும் மகனும் ஆபத்தான நிலையில் காணப்பட்டதால், மேலதிக சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இந்தியாவில் பெங்களூரில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கவுள்ள மன்செஸ்டர் அகடமி





இலங்கையின் முன்னணி கால்பந்தாட்ட பயிற்சிக் கழகமான மன்செஸ்டர் கால்பந்தாட்ட அகடமியின் 12, 14 மற்றும் 16 வயதிற்குட்பட்ட கனிஷ்ட அணியினர் இம்மாதம் ஏப்ரல் 26 தொடக்கம் மே 03 வரை கர்நாடக மாநில உதைபந்தாட்ட சங்கத்தின் அழைப்பின்பேரில் பெங்களூரில் போட்டி தொடர் ஒன்றில் பங்கேற்ற இந்தியா பயணமாகியுள்ளனர்.

மன்செஸ்டர் கால்பந்தாட்ட அகடமியின் 14 வயதிற்குட்பட்ட அணியில் கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க கல்லூரி மாணவரான இசட்.ஏ. காலித் இடம்பெற்றுள்ளார். சிறுவயது தொடக்கம் கால்பந்தாட்டத்தை ஆர்வத்துடன் பயின்றுவரும் காலித், டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரி பாடசாலை அணியின் முன்கள வீரராக செயற்படுகின்றார்.

தனது ஆட்டத்திறனை மேலும் சீரமைக்கும் நோக்கில் கடந்த ஆண்டு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் அனுமதியின் கீழ் செயற்படும் மன்செஸ்டர் கால்பந்தாட்ட அகடமியில் இணைந்து கொண்டார். தேசிய அணியின் பயிற்சியாளர்கள் மற்றும் பல முன்னாள் தேசிய அணி வீரர்களால் பயிற்றப்படும் மன்செஸ்டர் கால்பந்தாட்ட அகடமி இலங்கையின் முதல்தர மற்றும் அனுபவமிக்க அகடமியாகும். மேலும் பல தேசிய மட்ட வீரர்கள் உருவாக்கியுள்ள அகடமியுமாகும்.

கடந்த 02 மாதங்களாக காலித் உட்பட மன்செஸ்டர் கால்பந்தாட்ட அகடமி அணியினர் இந்தப் போட்டித் தொடருக்காக தம்மை கடுமையான தயார்படுத்தி வந்தனர். அவர்கள் பெத்தகான செயற்கைதள மைதானத்தில் தொடர் பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

இந்தப் போட்டி தொடருக்காக முழுமையான பயிற்சிகளை மேற்கொண்டோம். நாம் அகடமியை மாத்திரமன்றி இலங்கையையும் பிரநிதித்துவப்படுத்துகின்றோம். எனவே, எமக்கான பொறுப்பு அதிகமாகும். பயிற்சிகளின் போது பயிற்சிவிப்பபாளர்கள், அணிவீரர்கள் மற்றும் பெற்றோர் வழங்கிய ஒத்துழைப்பு மிகவும் அர்ப்பணிப்பானதும் பாராட்டத்தக்கதுமாகும் - என அகடமியின் தலைமை பிரதானி மற்றும் தலைமை பயிற்சிவிப்பாளர் ஜோர்ஜ் அகஸ்ரியன் தெரிவித்தார்.

இவர் முன்னார் தேசிய அணி வீரரும் தேசிய அணியின் பயிற்சிவிப்பாளருமாவார்.

14 வயதிற்குட்பட்ட அணியின் பயிற்சியாளராக அன்டன் வொம்பெக் செயற்படுகின்றார்.

# பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவின் தலைவராக தாரக பாலசூரிய ஏகமனதாகத் தெரிவு



பாராளுமன்றத்தில் நேற்று (27) நடைபெற்ற பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவின் முதலாவது கூட்டத்தில் அதன் தலைவராக இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அவரது பெயரை முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.இராமேஸ்வரன் அதனை வழிமொழிந்தார்.

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை, நிதி உறுதிப்பாடு, முதலீட்டு முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் மற்றும் அரச - தனியார் பங்குடமைகளுக்கான வாய்ப்புகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பரிசீலிப்பது இந்தக் குழுவின் பணிகளாகக் காணப்படுகின்றன.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு போன்ற ஏனைய நிதிக் குழுக்களின் விடயதானங்களுடன் முரண்படாத வகையில் குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய தலைவரை சந்தித்துக் கலந்துரையாடுவதாக குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.இராமேஸ்வரன், வருண லியனகே மற்றும் (கலாநிதி) நாலக்க கொடஹேவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்கள பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வாவும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்துகொண்டார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஏப்ரல் 28ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# விமல் படும் பாடு!

2022 ஆம் ஆண்டு ‘அரகலய’ அரசாங்க எதிர்ப்புப் போராட்டத்தைப் பயன்படுத்தி இலங்கையில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும் சதித்திட்டத்திற்கு ஆதரவளித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மீது குற்றம் சுமத்தியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச.

‘அரகலய’ அரச எதிர்ப்புப் போராட்டத்தைப் பயன்படுத்தி சபாநாயகர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதே சதி என நிகழ்வொன்றில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார். “ஒன்பது: மறைக்கப்பட்ட கதை” என்ற தனது புதிய புலனாய்வு நூலை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு இந்த தகவலை வெளியிட்டார் விமல் வீரவன்ச.

போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகையில் இருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முப்படைகளின் உயர் அதிகாரிகளையும் கொலை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

“சில நபர்களை வெளியேற்றி அதன் பின்னர் சபாநாயகரின் கீழ் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் நிச்சயமாக பாதுகாப்புப் படைகளின் பிரதானி சவேந்திர சில்வா ஆகியோரின் தலையீடு இருப்பதைக் காண முடியும்” என்று அவர் கூறினார்.

அமைதியின்மைக்கு முந்தைய நாள், சவேந்திர சில்வா ஒரு நிகழ்விற்காக இந்தியாவிற்கு அழைக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேறியதாகவும், மற்ற அனைத்து ஆயுதப்படைகளின் உயர்மட்ட அதிகாரிகள் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இருந்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் வீரவன்ச சுட்டிக்காட்டினார்.

“அவர் இலங்கைக்கு திரும்பியதும் தேவையான சம்பவங்கள் நடந்து முடிந்துவிடும் வகையில் திட்டம் இருந்தது. இலங்கையில் இடைக்கால ஆட்சியை அமைக்க எண்ணியுள்ள வெளிநாட்டு சக்திகள் சவேந்திர சில்வாவை கட்டுப்படுத்த ஐ.நாவின் குற்றச்சாட்டுகளைப் பயன்படுத்திக் கொண்டமை தெளிவாகத் தெரிகிறது” என்றார்.

அமெரிக்காவை சமாதானப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான திட்டம் தீட்டப்பட்டதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங்கின் சில அறிவுறுத்தல்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கடைப்பிடித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அமெரிக்காவில் வசிக்கத் திட்டமிட்டிருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி அவ்வாறு செய்ததாக கூறுகிறார் விமல் எம்.பி. இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து அமெரிக்க தூதுவர் ஏமாற்றம் தெரிவித்தார். இந்த தகவல்கள் முழுவதும் கற்பனையான புனைகதைகள என ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளமை போன்று விமல் புனைகதைகளை விடுவது அப்பட்டமாகவே தெரிகிறது. வழமையாக சர்வதேச சதி என்ற தனது மாமூல் அரசியலை செய்ய முனைகிறார் விமல் என்று கூறினாலும் மிகையில்லை. இந்தப் புனைகதைகள் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும் அதனை சிங்கள மக்கள் நம்புவார்களா என்பது நிச்சயமில்லை.

இதற்கப்பால், உள்நாட்டுப் போரை முடித்த செம்மல், சிறந்த நிர்வாகி என்று ஒருகாலத்தில் புகழப்பட்ட கோட்டாபய, வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரின் பேச்சைக் கேட்டு நடந்தாரென கூறுவது வெறுமனே கோட்டாவை மட்டுமல்ல, அவருக்கு வாக்களித்த 69 இலட்சம் பேரையும் அவமானப்படுத்துவதாகும். இப்படி ஒருவர் ஜனாதிபதியாக தொடராமல் வெளியேறியதே நல்லதென மக்கள் நினைக்கும்படி செய்துள்ளன விமலின் பேச்சுகள்.

எது எவ்வாறிருப்பினும், விமலின் இந்த பேச்சு தொடர்பில் பாதுகாப்பமைச்சு மறுப்பை வெளியிட்டுள்ளது. இனவாதத்தையும், பரபரப்பூட்டும் கருத்துகளை வெளியிட்டும் சிங்கள தேசியவாதிகளின் ஆதரவைப் பெற முயற்சிகளை எடுக்கிறார் விமல். ஆனால், விமலின் அந்தக் கருத்துகளை சிங்கள மக்கள் ரசித்தாலும் மேற்குலக சதி என்ற கோட்பாட்டை சிங்களவர்கள் மனதளவில் ஏற்கும் நிலை இன்றில்லை.


தமிழர்களுக்கு எதிரான இனவாதம் குறைவின்றி இருந்தாலும் பொருளாதார நெருக்கடியால் அல்லலுற்ற சிங்கள மக்கள் சர்வதேச நாடுகளைப் பகையுணர்வுடன் நோக்கும் நிலையில் இல்லை. புனைகதைகள் கூறி புத்தகங்களை விற்கலாம் விமல். ஆனால், மக்களின் நம்பிக்கையை அவ்வளவு இலகுவில் பெற்றுவிடமுடியாது. இனவாதத்தை விற்று செய்த அரசியல் கோட்டாவுடன் பின்கதவால் வெளியேறிவிட்டதென்பதை விமல் நினைவிற்கொள்தல் நன்று.

## இன்றைய நாளில்...

- 1611 – உலகின் மிகப்பெரிய கத்தோலிக்கப் பல்கலைக்கழகமான சாந்தோ தோமஸ் பல்கலைக்கழகம், பிலிப்பைன்ஸில் அமைக்கப்பட்டது.
- 1876 – பிரித்தானிய இந்தியாவின் அரசியாக விக்டோரியா மகாராணி தெரிவுசெய்யப்பட்டமை லண்டன் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.
- 1932 – மஞ்சள் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1978 – ஆப்கானிஸ்தான் அரசுத்தலைவர் முகமது தாவூது கான் கம்யூனிச சார்புப் போராளிகளால் பதவியிறக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- 1995 – பலாலியில் அவ்ரோ விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதற்கு அடுத்த நாள் இன்னுமொரு விமானமும் வீழ்த்தப்பட்டது.
- 2000 – இலங்கை இராணுவத்தினருக்கெதிரான விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
- 2005 – ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.




# தற்போதைய தடுப்பூசிகள் புதிய கொரோனாவை தடுக்குமா?




இந்தியாவில் சில வாரங்களாகத் தினசரி கொரோனா தொற்று ஏறுமுகத்தில் இருக்கிறது. அதேவேளை, பெரிதாக அச்சப்படும் வகையில் சூழல் இல்லை என்பதாகவே அரசு சொல்கிறது. எனினும், ஒரு பாதுகாப்புக்காக, கொரோனா தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள முன்வந்தால், தடுப்பூசிகள் கையிருப்பில் இல்லை என்கின்றனர். அப்படியே கிடைத்தாலும், தற்போதைய கொரோனா தடுப்பூசிகள் இப்போது பரவும் உருமாறிய கொரோனாவுக்குப் பலன் தருமா என்று சந்தேகப்படுபவர்களும் இருக்கின்றனர்.

### ‘எக்ஸ்பிபி.1.16’ கொரோனா திரிபு

இந்தியாவில் மட்டுமல்லாமல், உலக அளவிலும் இப்போது பரவும் கொரோனாவுக்கு ‘எக்ஸ்பிபி.1.16’ (XBB.1.16) எனும் ஒமிக்ரோன் துணை வேற்றுருவம்தான் (Omicron sub variant) காரணம். ஆரம்பத்தில் கொரோனா பரவலுக்குக் காரணமாக இருந்த SARS-CoV-2 கிருமியின் பலதரப்பட்ட வேடங்களில் இது ஒரு புதிய வேடம். அதாவது, புதிய திரிபு (Mutation). மற்ற திரிபுகளைவிட அதிவேகமாக வளர்வதும், நம் தடுப்பாற்றல் பிடியிலிருந்து எளிதில் தப்பித்துவிடுவதும் இதன் தனித்தன்மைகள்.

உலகில் இதன் பரவல் கடந்த ஜனவரி 9 அன்று கண்டறியப்பட்டது. அதன் நீட்சியாக உலக சுகாதார நிறுவனம் மார்ச் 22 அன்று, ‘தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டிய வேற்றுருவம்’ (Variant under monitoring- VUM) என்று இதைச் சுட்டிக்காட்டியது. அதே மார்ச் மாதத்தில், இந்தியாவில் மகராஷ்டிர மாநிலத்தில் இது பரவுவது உறுதியானது.

இதுவரை உலகில் 33 நாடுகளில் இது பரவியிருக்கிறது. கடந்த வாரத்தில் இந்தியாவில் அதிகபட்சமாக ஒரு நாளில் 12,193 புதிய கொரோனா நோயாளிகள் பதிவாகியுள்ளனர். 42 பேர் இறந்துள்ளனர். தமிழகத்தில் 11 மாவட்டங்களில் கொரோனா பரவல் அதிகரித்திருக்கிறது.

### அச்சம் வேண்டாம் - எச்சரிக்கை போதும்

கடந்த மூன்று கொரோனா அலைகளில் ஏற்பட்ட தீவிரமான பாதிப்புகள் போன்று ‘எக்ஸ்பிபி.1.16’ திரிபால் ஏற்படவில்லை. ஆகவே, இதற்கு அச்சப்படத் தேவையில்லை. ஆனாலும், எச்சரிக்கை அவசியம் என்கிறது உலக சுகாதார ஸ்தாபனம். மேலும், இந்தத் திரிபைச் சென்ற வாரம் ‘கவனத்துக்குரிய வேற்றுருவம்’ (Variant of interest – VOI) என்று வகைப்படுத்தியுள்ளது.

இதை எதிர்கொள்வதற்கு மரபணு வரிசை ஆய்வு (Genomic surveillance) உள்ளிட்ட பரிசோதனைகளை அதிகப்படுத்துவதும் மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதும் முக்கியம். என்றாலும், இது பரவுவதைத் தடுப்பதற்குப் பழைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். கொரோனா தடுப்பூசித் தவணைகள் விடுபட்டுப்போனவர்களுக்கு அவற்றைச் செலுத்துவதில் முன்னெடுப்புகள் தேவை என்கிறது அந்நிறுவனம்.

### யாருக்குத் தேவை?

தற்போது அவசரமாகத் தடுப்பூசி தேவைப்படுபவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள்தான். இவர்களில்கூட இணைநோய் உள்ளவர்கள், கர்ப்பிணிகள், முதியோர், புற்றுநோய், எய்ட்ஸ் போன்ற நோய்களால் தடுப்பாற்றல் குறைந்தவர்கள், தொடர்ந்து ஸ்டீரொய்ட் மருந்துகளை எடுத்துக் கொள்பவர்கள் தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ளப் பெரிதும் தயங்குகின்றனர்.

### சந்தேகங்களும் விளக்கமும்

இவர்களின் முதல் சந்தேகம், ‘‘தடுப்பூசி செலுத்திக்கொண்டாலும் கொரோனா ஏற்படுகிறது. பிறகு எதற்குத் தடுப்பூசி?’’ என்பதுதான். இதற்குச் சில அடிப்படை விடயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். எந்தவொரு கொரோனா தடுப்பூசியும் கொரோனா தொற்று ஏற்படுவதைத் தடுக்கக்கூடியது என்று சொல்லவில்லை. தொற்று தீவிரமாகாமல் மட்டுமே அது பார்த்துக் கொள்ளும்.

அதன் பலனாக, இறப்பிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியும். அண்மையில், புனேயில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி, ‘எக்ஸ்பிபி.1.16’ திரிபு தொற்றுக்கு ஆளானவர்களில் 26% பேர் மூன்று தவணை கொரோனா தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டவர்கள்தான். ஆனாலும், இவர்களில் ஒருவர்கூட மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அளவுக்கு கொரோனா தொற்றால் பாதிக்கப்படவில்லை என்பதிலிருந்தே இந்த உண்மையைப் புரிந்துகொள்ளலாம்.

அடுத்ததாக, சீனாவில் முதன்முதலில் பரவிய SARS-CoV-2 கிருமியைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தற்போதைய கொரோனா தடுப்பூசிகள், இப்போது பரவும் புதிய திரிபுகளுக்குப் பலன் தருமா என்பது பலருடைய கேள்வி. பொதுவாக, ஒருவருக்குக் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட இரண்டு வாரங்களில் அவருடைய இரத்தத்தில் கொரோனாவுக்கு எதிராக ‘பி’ செல் எதிர்ப்பணுக்கள் (Antibodies) முதலில் அதிகரிக்கும்.

அந்த நபருக்குத் தொற்று ஏற்பட்டால், அது தீவிரமாகாமல் இவை தடுக்கும். தொற்று மறைந்ததும் இவற்றின் அளவு குறைந்துவிடும். அதேவேளை, ‘T’ memory cells எனும் நினைவணுக்கள் அதிகரிக்கும். ஆனாலும், இந்த செல்களுக்கும் கொரோனா தொற்று ஏற்படுவதைத் தடுக்கும் ஆற்றல் இல்லை. மாறாக, இவை கொரோனா கிருமிகளை அடையாளம் கண்டுகொள்வதுடன், நீண்ட காலம் நினைவில்கொள்வதும் உண்டு.

ஆகவே, மறுபடியும் அந்த நபருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டால், ‘T’ செல்கள் அதை அழிக்கும் விசையில் வேகமெடுக்கும். வழக்கத்தில், கொரோனா தொற்றாளரின் உடல் செல்களில் கோடிக்கணக்கில் புதிய கிருமிகள் படியெடுக்கும். அந்தக் கிருமிகளைக் கட்டுப்படுத்துவதுதான் ‘T’ செல்களின் வேலை.

எப்படியெனில், கொரோனா கிருமிகளால் தொற்று ஏற்பட்ட உடல் செல்களை, ‘T’ செல்கள் அழித்துவிடும். அப்போது அந்த செல்களில் குடிபுகுந்துள்ள கொரோனா கிருமிகளும் அடியோடு அழிந்துவிடும். ஆகவே, தொற்றாளர் உடலில் அந்தக் கிருமிகளின் ஆதிக்கம் குறைந்து, நோய் தீவிரமாகாமல் பாதுகாக்கப்படுவார்.

இப்போது பரவும் ‘எக்ஸ்பிபி.1.16’ திரிபுக்கும் இது பொருந்துமா என்றால் பொருந்தும். எப்படி? இதுவரை 33 நாடுகளிலிருந்து கிடைத்துள்ள ஆய்வறிக்கைகளின்படி கொரோனா எந்த வேடத்தில் வந்தாலும், தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களின் ‘T’ செல்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அதை நினைவில் வைத்துக்கொள்வதாகத் தெரிகிறது.

‘T’ செல்களின் அதிகபட்ச நினைவுக்காலம் இன்னும் முடிவாகவில்லை. மேலும், ‘எக்ஸ்பிபி.1.16’ திரிபில் மட்டும் 3,648 மரபணு வரிசைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவற்றில் எந்தவொன்றுக்கும் இந்த நினைவணுக்களை அழிக்கும் திறன் இதுவரை உருவாகவில்லை. அதனால், இப்போது பரவும் ‘எக்ஸ்பிபி.1.16’ திரிபு ‘T’ செல்லிடமிருந்து தப்பிக்க முடியாது.

### ஆபத்து குறைவு

அப்படியானால், நம் தடுப்பாற்றல் பிடியிலிருந்து இந்தத் திரிபு எளிதில் தப்பித்துவிடும் என்று ஏன் சொல்கிறார்கள்? இந்தத் திரிபு முதல்நிலைத் தடுப்பான ‘பி’ செல் எதிர்ப்பணுக்களிடமிருந்து தப்பிக்கும் தன்மை உடையது. அதைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறார்கள்.

உதாரணத்துக்கு, ‘பி’ செல் என்பது ரோந்து சுற்றும் காவல்காரர் என்றால், ‘T’ செல் என்பது துணை இராணுவம். ‘பி’ செல்லிடமிருந்து ‘எக்ஸ்பிபி.1.16’ திரிபு தப்பித்தாலும், ‘T’ செல்லிடமிருந்து தப்பிக்க முடியாது. அதனால்தான் இப்போது கொரோனா கடுமையாவதில்லை. இறப்பவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவு.

**கு.கணேசன் - பொதுநல மருத்துவர்**
**நன்றி - இந்து தமிழ்**

## நக்கல் நமசிவாயம்

**தேர்தலைப்பத்தி யாரும் பேசமாட்டாங்களோ எண்டு ஆசையாக் கிடக்குது..!**



# தராக்கி சிவராம் 18ஆவது நினைவுதினம் இன்று

தர்மரட்ணம் சிவராம் அல்லது தராக்கி சிவராம் (11.08.1959 – 28.04.2005) இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளரும் தமிழ்நெட்டின் பிரதான எழுத்தாளரும் முன்னாள் போராளியுமாவார். பம்பலப்பிட்டியில் பொலிஸ் நிலையம் முன்பாக வெள்ளை நிற வேன் ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட இவர் தாக்கப்பட்ட பின்னர் வாகனமொன்றில் கொண்டு வரப்பட்டு இலங்கை பாராளுமன்றத்துக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தலையை இலக்கு வைத்தே 9 மில்லிமீற்றர் வகை கைத்துப்பாக்கியினால் இவர் சுடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.



சிவராம் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பில் மகேஸ்வரி, புவிராஜகீர்த்தி தர்மரட்ணம் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். சிவராமின் தந்தையார் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அவரின் பாட்டனார் சபாபதிப்பிள்ளை தர்மரட்ணம் (வன்னியனார்) 1938ஆம் ஆண்டில் மட்டக்களப்பின் இரண்டாவது தெரிவு செய்யப்பட்ட இலங்கை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பில் யோகரஞ்சனி என்பவரை வாழ்க்கைத் துணையாக ஆக்கிக்கொண்ட சிவராமிற்கு வைஸ்ணவி, வைதேகி என்ற இரு மகள்களும் சேரலாதன் என்ற மகனும் உள்ளனர்.

ஆரம்பக்கல்வியை புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். அதைத் தொடர்ந்து கொழும்பில் அக்குவானாஸ் கல்லூரியில் தொடர்ந்தார். பல்கலைக்கழகத்திற்கு தெரிவான இவர் பேராதனைப் பல்கலைகழகத்தில் அனுமதிபெற்றார். செப்டெம்பர் 1981இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற அவர், ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகக் கொண்டு இரண்டு ஆண்டுகள் மட்டுமே அங்கு பயின்ற பின்னர், அரசியல் ஈடுபாட்டினாலும், 1983 இல் இடம்பெற்ற இனக்கலவரங்களினாலும் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டார்.

சிவராம் தராக்கி என்ற புனைபெயரில் ஆங்கிலத்தில் கொழும்பில் இருந்து வெளிவரும் ‘The Island’ ஏட்டில் தமது முதலாவது கட்டுரையை 1989இல் எழுதினார். அரசியல், போரியல் மற்றும் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. உள்நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் அவரது கட்டுரைகள் பெயர்பெற்றிருந்தன.

ஊடகத்துறை வரலாற்றில் மிகவும் சவால் நிறைந்த காலகட்டத்தில் துப்பாக்கி முனைகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தனது கருத்துகளினூடாக உண்மைகளை உரக்கச்சொன்ன மிகவும் துணிச்சல் மிக்க ஊடகப் போராளியாக திகழ்ந்த ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் ஆவார்.

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு: இருவர் படுகாயம்!

## சம்மட்டிவாடி பகுதியில் சம்பவம்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கற்பிட்டி பிரதேசத்தில் இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் கெப் வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கற்பிட்டி - மண்டலக்குடா பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியின் சம்மட்டிவாடி பகுதியில் நேற்று (27) காலை குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டியிலிருந்து மன்னார் நோக்கிப் பயணம் செய்த இலங்கை போக்குவரத்துக்கு சபை பஸ்ஸுடன், பாலாவியிலிருந்து கற்பிட்டி நோக்கிச் சென்ற கெப் வண்டி மோதியே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கெப் வண்டியில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்குள்ளானதுடன், அங்கிருந்தவர்களால் அவ்விருவரும் உடனடியாக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, மேலதிக சிகிச்சைக்காக கெப் வண்டியின் சாரதி சிலாபம் வைத்தியசாலைக்கும் சாரதிக்கு அருகில் இருந்து பயணித்த மற்றையவர் குருநாகல் வைத்தியசாலைக்கும் உடனடியாக மாற்றப்பட்ட போதிலும், கெப் வண்டியின் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள மற்றைய நபர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருவதுடன், அவரின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதி சிறிய காயங்களுக்குள்ளாகிய நிலையில் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும், பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளுக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கோழித் தீவன உற்பத்திக்காக சோளத்தை இறக்குமதி செய்வது குறித்து கலந்துரையாடல்





கோழித் தீவன உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் சோளத்தை இறக்குமதி செய்வது தொடர்பான கலந்துரையாடல் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் இணைத்தலைமையில் நேற்று முன்தினம் (26) ஜனாதிபதி செயலகத்தில்இடம்பெற்றது.

கோழி இறைச்சி மற்றும் முட்டைக் கைத்தொழிலை சீரான முறையில் முன்னெடுத்து, நாட்டின் கோழி இறைச்சி மற்றும் முட்டைத் தேவையை தொடர்ச்சியாக பூர்த்திசெய்வது மற்றும் நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்குவது என்பன குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கால்நடைத் தீவனத்துக்குப் பயன்படுத்தப்படும் சோளத்தில் தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள அளவு, எதிர்காலத்தில் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டு, இறக்குமதி செய்ய வேண்டிய சோளத்தின் அளவு தொடர்பான அறிக்கையொன்றை தயாரிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க விவசாய மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் துரிதமாக சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தப்படும் சோள உற்பத்தி மற்றும் அதன் விலைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் முதன்மையான கவனம் செலுத்தப்பட்டதுடன், வருடாந்த சோளத் தேவையில் இறக்குமதி செய்யவேண்டிய அளவை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சாகல ரத்நாயக்க இதன்போது பணிப்புரை வழங்கினார்.

உலக சந்தையில் சோளத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பங்களில், இறக்குமதி செய்வதன் மூலம் உள்நாட்டு சோளத் தேவையை நெருக்கடியின்றி பூர்த்திசெய்ய முடியும் எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போதைய அரிசி தேவையை விட உள்நாட்டு அரிசி உற்பத்தி அதிகமாக உள்ளதால், அதிகப்படியான அரிசியின் ஒரு பகுதியை கால்நடை தீவனத்துக்கு பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், மேலும் கால்நடை தீவனத்துக்கு அரிசி பயன்படுத்துவதற்கு அரசாங்கம் விதித்துள்ள பல்வேறு கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எனவே, மக்களின் அரிசி நுகர்வுத் தேவையையும் தற்போதைய அரிசி உற்பத்தியையும் துல்லியமாக மதிப்பீடு செய்து, அதிகப்படியான அரிசி கையிருப்பைக் கணக்கிட்டு உடனடியாக அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு விவசாய மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுக்கு சாகல ரத்னாயக்க பணிப்புரை விடுத்தார்.

மேலதிகமாக உள்ள அரிசி இருப்பை இதற்காக பயன்படுத்துவதன் மூலம், விவசாயிக்கான அரிசியின் விலையை ஸ்திரமாக பேணவும் கால்நடை தீவனத்துக்காக இறக்குமதி செய்யப்படும் சோளத்தின் தேவையை குறைக்கவும் முடியுமென சுட்டிக்காட்டியதோடு, இதன்மூலம் வெளிநாட்டு செலாவணியை சேமிக்க முடியும் எனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட, வர்த்தக அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி.அதபத்து மற்றும் விவசாய அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள், கோழி மற்றும் முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் குழுவினர் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# 112 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

அரசாங்க வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் 112 வகையான மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், முன்னதாக அரச மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் 1,347 வகையான மருந்துகளில், 150 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் 50 பில்லியன் ரூபா அதாவது 13.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகின்றதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# வெலிப்பன்னை ரஹ்மானியா மகா வித்தியாலய அதிபராக மொஹமட் நவுமான் நியமனம்



(பேருவளை பீ.எம்.முக்தார்)

மேமா/மது/வெலிப்பன்னை ரஹ்மானியா மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) புதிய அதிபராக ஏ.ஆர்.மொஹமட் நவுமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபராக கடமையாற்றிய எம்.வை.கௌஸுல் அமீர் ஓய்வு பெற்றதை அடுத்து புதிய அதிபராக மொஹமட் நவுமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் காலத்தில் பாடசாலையின் கல்வி, பௌதீக வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும் என்பது சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

# மதுபான நிலையங்கள் 3 நாட்களுக்கு பூட்டு

சில்லறை விற்பனையில் ஈடுபடும் அனைத்து மதுபான நிலையங்களையும் மூடுவதற்கான அறிவிப்பொன்றை மதுவரித் திணைக்களம் விடுத்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் மே 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் மதுபான விற்பனை நிலையங்களை மூடுமாறு அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையை முன்னிட்டு, இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் கொலை



அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிரேவத்தை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.இருவர் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த வேளையில், அங்கு வருகை தந்த ஒருவர் குறித்த இருவரிடமும் முரண்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மதுபானம் அருந்தியவர்களுள் ஒருவர் குறித்த நபரை கத்தியால் குத்தியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.இச்சம்பவத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டவர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பலபிட்டி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டில் வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடி

# சந்தேக நபர் கைது

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்து, நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் முந்தல் பொலிஸ் பிரிவில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் (26) மாலை கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ருமேனியாவில் தொழில்வாய்ப்பு பெற்றுத் தருவதாக தெரிவித்து, 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை குறித்த நபர் பெற்றுக்கொண்டுள்ளார்.

24 வயதுடைய பங்கதெனிய பகுதியைச் சேர்ந்தவரே நிதி மோசடி தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரை முந்தல் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொலன்னாவை உள்ளிட்ட சில பகுதிகளில் நாளை 10 மணிநேர நீர்வெட்டு

கொலன்னாவை உள்ளிட்ட சில பகுதிகளில் நாளை (29) முற்பகல் 11 மணிமுதல் இரவு 09 மணிவரை நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

கொலன்னாவை நகர சபைக்குட்பட்ட பகுதிகள், மொரகஸ்முல்ல, இராஜகிரிய, ஒபேசேகரபுர, பண்டாரநாயக்கபுர, எத்துள்கோட்டே, நாவல, கொஸ்வத்தை, இராஜகிரிய முதல் நாவல திறந்த பல்கலைக்கழகம் வரையான பிரதான வீதியுடன் இணையும் குறுக்கு வீதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

கொலன்னாவை நீர் விநியோகப் பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ள அத்தியாவசிய திருத்தப் பணிகள் காரணமாக நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

# நீர்க் கட்டணத்தை அதிகரிக்க ஆலோசனை

நீர்க் கட்டணத்தை விரைவில் அதிகரிக்க வேண்டுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி பணிப்பாளர் என்.கே.ரணதுங்க நேற்று (27) தெரிவித்துள்ளார்.

மின் கட்டணம் அண்மையில் உயர்த்தப்பட்டதால் மேலதிக செலவை சபை ஏற்க வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

"மின் கட்டண உயர்வால், 10 வருடங்களுக்கு பின்னர், கடந்தாண்டு செப்டெம்பரில் நீர்க் கட்டணமும் உயர்த்தப்பட்டது. மீண்டும் 2023 ஜனவரியில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. ஆனால், அந்த உயர்வு இன்னும் நீர்க் கட்டணத்தில் சேர்க்கப்படவில்லை" என்றார்.

"இருப்பினும், புதிய மின் கட்டணத்தை நிர்வகிக்கும்போது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலதிக செலவுகளை ஏற்க வேண்டியிருந்தது. ஆனால் எங்களால் இதை நீண்ட காலத்துக்கு செய்யமுடியாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின் கட்டண உயர்வால் மேலதிகமாக ரூ.4 ஆயிரம் கோடி செலவாகிறது.

நிலவும் வெப்பமான காலநிலையால் நீரின் தேவையும் சுமார் 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாத்தறையில் மின்சாரம் தாக்கி ஏழு வயது சிறுவன் உயிரிழப்பு

மாத்தறை, திக்வெல்ல பகுதியில் 7 வயதுடைய சிறுவன் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். குளிரூட்டியின் பின்புறத்தில் பென்சில் ஒன்று விழுந்ததைத்தொடர்ந்து அதனை எடுப்பதற்காக சென்ற வேளையிலேயே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை திக்வெல்ல காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீடொன்றிலிருந்து சடலம் மீட்பு

வாதுவ, மகாவிஹார வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டதாக வாதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் வாதுவ மகாவிஹார வீதியில் உள்ள வாடகை வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார்.

சாந்த சித்ரால் சல்காது (73 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாகவும் அவர் பாடசாலை கிரிக்கெட் முன்னாள் நடுவர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வீட்டினுள் இருந்து கடும் துர்நாற்றம் வீசுவதாக பிரதேசவாசிகளிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், வீட்டின் அறையொன்றிலுள்ள கட்டிலில் இருந்து உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டெடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.பாணந்துறை திடீர் மரண விசாரணை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையில், அவர் மூன்று நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.சடலம் பிரேத பரிசோதனைக்காக பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.







நோன்புப் பெருநாளை முன்னிட்டு காலி பிரிமியர் லீக் 2023மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி தடல்ல அல் முபாரக் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் தடல்ல பிரிமியர் லீக் (DPL) ஏற்பாட்டில் நடைபெற்றது. பிரதேசத்திலுள்ள 14 கிரிக்கெட் அணிகள் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றின. இறுதிப் போட்டி பாரூக் ஜெம்ஸ் (farook gems) கிரிக்கெட் அணிக்கும் இபா ஜெம்ஸ் (iffa gems) கிரிக்கெட் அணிக்குமிடையே நடைபெற்றதில் பாரூக் ஜெம்ஸ் அணி 10 மேலதிக ஓட்டங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

(படங்கள் - பேருவளை பீ.எம்.முக்தார்)

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.04.26
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5098 | ரூ. 15,005,918.00 | K | 1 2 1 6 4 1 |
| கொவிசெத | 3340 | ரூ. 98,780,465.04 | N | 32 34 37 61 |
| ஜாதிக சம்பத | 1553 | ரூ. 10,198,754.80 | மகரம் | 9 3 0 3 8 1 |
| தன நிதானய | 1128 | ரூ. 87,588,107.60 | H | 04 05 12 53 |
| ராசி சுப பலன் Handahana | 407 | ரூ. 2,923,534.20 | விருச்சிகம் (விசேட இலக்கினம்: விருச்சிகம்) | 22 25 45 56 |
| மெகா பவர் | 1446 | ரூ. 317,168,830.00 | R (சுப்பர் இலக்கம் 08) | 04 20 35 42 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# தந்தை செல்வாவின் நினைவுத்தூபி தெல்லிப்பழையில் திரைநீக்கம்



(யாழ். நிருபர்)

தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு நாளில் அவரது நினைவுத்தூபியொன்று யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. தெல்லிப்பழையில் அமைந்துள்ள சேமக்காலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (26) மாலை 4.30 மணியளவில் குறித்த நினைவுத்தூபி தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுநிலை பேராயருமான சு.ஜெபநேசனால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

கலைஞர் தவ.தஜேந்திரனால் நினைவுத்தூபி வடிமைக்கப்பட்டதுடன், இருபாலையிலுள்ள சஹானா சிற்பாலயம் சிற்ப வடிவமைப்பை மேற்கோண்டது. இந்நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வே.பத்மதயாளன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கிறிஸ்தவ மதகுருமார்கள், தந்தை செல்வா அறக்கட்டளை அங்கத்தவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக ஒன்றிணையுங்கள்

## கிளிநொச்சி ஊடக அமையம் அழைப்பு

(மு. தமிழ்ச்செல்வன்)




அரசால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப்படும் ஊடகத்துறை மிக மோசமாக நசுக்கப்படும் என்ற அச்சம் காணப்படுகிறது.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தங்களது கடமைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். எனவே, குறித்த சட்டமூலத்திற்கு எதிராக குரல கொடுக்க அனைவரையும் ஒன்றிணையுமாறு கிளிநொச்சி ஊடக அமையும் அழைப்பு விடுத்துள்ளது.

இச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்கு வருகின்றபோது மக்களின் உரிமைகள் சார்ந்து செய்திகள், கட்டுரைகள் எழுதுவது, முகநூல்களில் பதிவுகள், கருத்துகள் தெரிவிப்பது, ஜனநாயகத்தின் அடிப்படையில் போராட்டங்களை மேற்கொள்வது என அனைத்து ஜனநாயக செயற்பாடுகளும், கேள்விக்குள்ளாகும் எனவேதான் குறித்த சட்ட மூலத்திற்கு எதிராக எதிர்வரும் 29ஆம் திகதியன்று கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக காலை 9 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொண்டு வலுச் சேர்க்குமாறும் கிளிநொச்சி ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது.

## யாழ். மாநகர சபையை நாவலர் மண்டபத்திலிருந்து

# வெளியேற பணித்தமைக்கு எதிராக மேல் நீதிமன்றம் விதித்த இடைக்கால கட்டளை மே 29வரை நீடிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ். மாநகர சபையை வடமாகாண ஆளுநர் வெளியேற பணித்தமைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் விதித்த இடைக்கால கட்டளை மே மாதம் 29ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் குறித்த வழக்கு, விசாரணைக்காக எடுக்கப்பட்ட போதே நீதிமன்றம் இடைக்கால கட்டளையை நீடித்து உத்தரவிட்டது.

வடமாகாண ஆளுநர் யாழ். மாநகர சபையை நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து வெளியேற பணித்ததுடன், அதனை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு எதிராக யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கில் யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் ஆஜராகியிருந்தபோதே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் ஏப்ரல் 4ஆம் திகதி இந்த இடைக்காலக் கட்டளையை பிறப்பித்து குறித்த வழக்கு நேற்று முன்தினம் (26) ஒத்தி வைத்தது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது அரச சட்டவாதி தரப்பில் இடைக்கால கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி இடைக்கால கட்டளையை நீடித்து வழக்கை மே 29ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் தொடர்புகொள்ளவும்

## சைவப்புலவர் சங்கம் அறிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் தேர்வுகளுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள், தொடர்புகொண்டு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இம்மாதம் 28, 29, 30 மற்றும் மே 01ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை மற்றும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் (0777197067) மற்றும் சைவப்புலவர் சங்கத்தின் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் லீலாவதி (0762876981) ஆகியோரை தொடர்புகொண்டு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என சங்கத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

# காணிகளின் பயன்பாடு தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

(வட்டுக்கோட்டை நிருபர்)



அரச காணிகள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (26) புதன்கிழமை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச காணிகளின் பயன்பாடு தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடமாகாண காணி மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்கள், மாகாண காணி ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மாணவர்களுக்கான வினாவிடைப் போட்டி மாத்தளையில்

உக்குவளை செய்தியாளர்

உக்குவளையில் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் தரம் 11இல் கற்கும் மாணவர்களுக்கிடையிலான இரண்டாவது வினா - விடைப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாத்தளையில் அமைந்துள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளன

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புட்லண்ட் எம்.மன்சூர், விசேட அதிதியாக எல்கடுவ தமிழ் மகாவித்தியாலய அதிபர் எம்..தியாகராஜா, வர்த்தகர் டப்ளியூ.மஹ்ரூப் ஆகியோருடன் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்

கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியன்று உக்குவளை பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் மாணவர் மாணவியர்களுக்கிடையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ்மொழி, வரலாறு ஆகிய பாடங்களிலிருந்து இவ்வினா - விடை போட்டிகள் நடத்தப்பட்டு போட்டிகளின் இறுதியில் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை முதலிடத்தையும் ஞூரீவெல ஹமீதியா கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்று சங்கத்தின் சான்றிதழ்கள் மாணவர் மாணவியர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

வினா-விடைப் போட்டிகள் நடத்துவது சம்பந்தமான இச்சங்க உறுப்பினர்களுடனான கலந்துரையாடலொன்று இச்சங்கத் தலைவரும் முன்னாள் அதிபருமான எம். நிருபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

# மின்னல் தாக்கி இளைஞர் பலி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

அடுப்பு மூட்டும்போது மின்னல் தாக்கி 18 வயதான இளைஞன் ஒருவர் பலியான சம்பவம் ஒன்று பலாங்கொடை கொடகும்புர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினத்தன்று இப்பிரதேசத்துக்கு இடி, மின்னலுடன் கடும் மழை பெய்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் மரணமான பசிந்து விதுரங்க என்ற 18 வயதான இளைஞனும் அவரது தந்தையும் மாத்திரமே வீட்டில் இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மின்னல் தாக்குதலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இளைஞர் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நேரத்திலும் அவரது உயிர் பிரிந்திருததாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# இந்திய சுற்றுலாப் பயணி நுவரெலியாவில் மரணம்

ஆ.ரமேஸ்

இலங்கைக்கு சுற்றுலாப் பயணியாக வருகை தந்த இந்தியப் பிரஜை ஒருவர் நுவரெலியாவில் மாரடைப்பினால் அகால மரணமடைந்துள்ளதாக நுவரெலியா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி மற்றும் வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நபர் இந்தியா குஜராத்தை சேர்ந்த யோகேஸ்குமார் அசுமுன்லால் மேத்தா (வயது 67) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தியாவிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை நுவரெலியாவுக்கு எட்டு பேர் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் நுவரெலியா பிலக்பூல் பகுதியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த நிலையில் அன்றைய தினம் மாலை நுவரெலியா நகருக்குச் சென்று நகரை சுற்றி பார்த்துவிட்டு இரவு உணவை பெற்றுக்கொண்டு செல்ல வேன் ஒன்றில் பயணித்துள்ளனர்.

இதன்போது தனது மனைவியுடன் வருகை தந்திருந்த இந்தியப் பிரஜை ஒருவருக்கு திடீரென நெஞ்சு வலியில் ஏற்பட்டு அவதியுற்ற நிலையில் அவரை உடனடியாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றுள்ளனர்.

அங்குஇந்தியப்பிரஜைசிகிச்சைக்காகஅனுமதிக்கப்படும் முன்பே வழியில் உயிரிழந்துள்ளதாக சிகிச்சையை மேற்கொண்ட வைத்தியர் உறவினிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இந்தியப் பிரஜையின் திடீர் மரணம் குறித்து நுவரெலியா போக்குவரத்து பொலிஸாரும் வைத்தியசாலை பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேநேரத்தில் உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மாவட்ட வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனை நேற்றுமுன்தினம் மதியம் இடம் பெற்றது.

இதன் போது குறித்த இந்தியப் பிரஜை மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதையடுத்து உடல் அவரின் மனைவியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது உடல் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டு இந்தியாவுக்கு கொண்டுசெல்ல உள்ளதாக உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்ததாகவும் வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

# அனுமதி நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிச்சென்றவர் கைது

(எஸ்.கணேசன்)

ஹட்டன் பகுதியில் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறி மணல் கொண்டுசென்ற லொறியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் பொலிஸாரல் இவர் நேற்றுமுன் தினம் (26) மாலை ஹட்டன் -கொழும்பு பிரதான வீதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறி கித்துல்கல பகுதியிலிருந்து நோர்வூட் பகுதிக்கு கொண்டு செல்லும்போது ஹட்டன் பொலிஸாரினால் மணல் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதன்பின் கைப்பற்றப்பட்ட மணலையும், வாகனத்தையும், சந்தேக நபரையும் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் பிணையில் விடுதலை செய்துள்ளதுடன், அவரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.



மத்திய மலைநாட்டில் நேற்றுமுன்தினம் பெய்துவரும் அடைமழை காரணமாக மஸ்கெலியா நகரில் உள்ள பிரதான அஞ்சலகத்தில் மழைநீர் உட்புகுந்ததால் பணியாளர்கள் சிரமத்துக்குள்ளாகினர்.

(படப்பிடிப்பு: மஸ்கெலியா செய்தியாளர்)

# நானுஓயாவில் தடையை மீறும் கனரக வாகனங்கள்




செ.திவாகரன்

ஹட்டன்–நுவரெலியா பிரதானவீதியின்நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் தொடர்ச்சியாக வீதி விபத்து ஏற்பட்டுவந்த நிலையில் 5 தொன்களுக்கும் குறைவான எடையுள்ள வாகனங்கள் மாத்திரம் பயணிப்பதற்கு அனுமதி தற்போது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த பஸ் ஒன்று வேன் மற்றும் முச்சக்கரவண்டி ஆகியவற்றுடன் கடந்த ஜனவரி மாதம் (20 திகதி மோதுண்டதில் ஏழு பேர் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்திருந்தனர் இதன் பின்னர் மிகவும் செங்குத்தான இவ்வீதியின் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. அந்த விபத்தின் பின்னர் தொடர்ந்து ஒருமாதம் நானுஓயா, லிந்துலை பொலிஸார் கனரக வாகனங்கள் செல்லாத வகையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது பொலிஸார் கடமையில் இல்லாத காரணத்தால் இரவு மற்றும் பகல் நேரங்களில் தடைகளை மீறி கனரக வாகனங்கள் செல்வதாக இவ்வீதியோரத்தில் அமைந்துள்ள நு/நாவலர் பாடசாலை மாணவர்களும் இப்பகுதியில் வசிக்கும் பிரதேசவாசிகளும் ஏனைய வாகன சாரதிகளும் கனரக வாகனங்கள் சென்று வருவதினை கண்காணிக்கப் படுவதில்லை என குற்றம் சுமத்தி வருகின்றனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



**தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் ஹெம்மாதகம பள்ளிப்போருவ முஸ்லிம் வித்தியாலய மாணவன் எம்.என்.நாமிக் 157 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், பள்ளிப்போருவை எம்.இசட்.எம்.நஸீம், எம்.எச்.எஸ்.சுரூரியா (ஆசிரியை) தம்பதியரின் புதல்வராவார்.**

# மனைவியை குத்திவிட்டு கணவன் தலைமறைவு

## கொஸ்கொல்லவில் சம்பவம்

கலஹா செய்தியாளர்

கம்பளை கொஸ்கொல்ல பிரதேசத்தில் நேற்று (27) காலை தனது இரு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அழைத்துச் சென்ற பெண் ஒருவர் கணவரின் கத்திக்குத்தி தாக்குதலுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சேர்ககப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொஸ்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான சமந்தி இனோகா ரணசிங்க என்ற 44 வயது பெண்ணே தலை மற்றும் இடுப்பு பகுதியில் கத்திக்குத்து காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

குடும்பப் பிரச்சினையே கத்திகுத்து சம்பவத்திற்கு காரணமென பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது

தலைமறைவான சந்தேக நபரை கம்பளை பொலிஸார் கைது செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் கொரோனா தொற்று அதிகரிப்பு; மீண்டும் முகக்கவசம் அணிய பணிப்பு!



நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட சுகாதார விதிமுறைகளை மக்கள் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என சுகாதார சேவைகள் - பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை (25) நால்வர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் (26) எழுவர் இனங்காணப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 72 ஆயிரத்து 150 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றானது குறைவடைந்துள்ள நிலையில், மீண்டும் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதானது ஆபத்தான விடயம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட சுகாதார விதிமுறைகளை மக்கள் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலைகளின் கட்டணம் அதிகரிப்பு



நாடளாவிய ரீதியில் அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் அறவிடப்படும் நுழைவுக் கட்டணத்தை திருத்தியமைத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவால் 2008ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள கட்டணம் 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொட்டாவ - கட்டுநாயக்கவுக்கான புதிய கட்டணம் 400 ரூபாவும், கட்டுநாயக்கவிலிருந்து ஹம்பாந்தோட்டைக்கு 1,300 ரூபாவும் கொட்டாவையிலிருந்து காலிக்கு 500 ரூபாவுமாக கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# கடற்றொழில் அபிவிருத்திக்கு சவூதியின் ஒத்துழைப்பைப் பெற முயற்சி!




கடற்றொழில் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு சவூதி அரசாங்கத்தின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சுக்கு நேற்று (27) வருகைதந்த இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடலின்போதே இவ்விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகளை நாடளாவிய ரீதியில் முன்னேற்றும் நோக்கில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய பல்வேறு திட்ட முன்வரைவுகள் தயார்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்புகளை சவூதி அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வது தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கடற்றொழில் அமைச்சின் செயலாளரும், திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும், இராஜாங்க அமைச்சரின் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோதமாக கடலட்டைகளை பிடித்த 10 பேர் யாழில் கைது



யாழ்ப்பாணத்தில் வெற்றிலைக்கேணி மற்றும் நாகர்கோவிலில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது சட்டவிரோதமாக கடல் அட்டைகளைப் பிடித்த 10 பேரை கைதுசெய்தனர்.

வடக்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான வெற்றிலைக்கேணி மற்றும் நாகர் கோவில் கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான படகுகளை நிறுத்தி சோதனை செய்ததில் அனுமதிப்பத்திரமின்றி கடலட்டைகளைப் பிடித்த 10 பேரை கைதுசெய்ததுடன், கடலட்டைகள் மற்றும் 5 டிங்கி படகுகளையும் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மன்னார், வான்கலை மற்றும் பள்ளிமுனை பிரதேசங்களைச் சேர்ந்த 22 முதல் 46 வயதுக்குட்பட்டவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தாளையடி கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



# கடந்த 4 மாதங்களில் யானை - மனித மோதலில் 143 யானைகள் உட்பட 36 மனிதர்கள் உயிரிழப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இலங்கையில் கடந்த 4 மாதங்களில் 143 யானைகளும் 36 மனிதர்களும் பலியாகியுள்ளதாக சுற்றாடல் மற்றும் ஜீவகாருண்ய அமைப்புகள் அறிவித்துள்ளன. பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் இவ்வமைப்பின் தகவல் குறிப்புகளில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இத்தகவல்களுக்கிணங்க யானைகளில் அதிகமானவை துப்பாக்கிச்சூடு மின்சாரவேலி உட்பட மனிதச் செயற்பாடுகளால் பலியாக்குவதாகவும் காடழிப்பு செயற்பாடுகளால் யானைகள் மனித குடியிருப்புகளை நாடி வருவதாகவும் இதனால் யானைகளுக்கு அஞ்சி மனிதர்கள் யானைகளை கொல்வதாகவும் இந்த அச்சத்தினால் யானைகள் மனிதர்களைக் கொல்வதாகவும் ஜீவகாருண்ய அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதனால் இவ்விரண்டு உயிர்களையும் பாதுகாக்கக் கூடிய முறையான திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டும் எனவும் இவர்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

# நயினாதீவில் புதிய மின் பிறப்பாக்கி; குடிநீர்ப் பிரச்சினைக்கும் தீர்வு!

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

நயினாதீவு பிரதேசத்தில் பழுதடைந்திருந்த மின்பிறப்பாக்கிக்குப் பதிலாக சுமார் 300 மெகாவோட்ஸ் உற்பத்தித் திறனுள்ள மின்பிறப்பாக்கி ஒன்று புதிதாக பொருத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் இலங்கை மின்சார சபையால் இந்த மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், நயினாதீவிற்கு 24 மணித்தியால மின்சார விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், RO திட்டத்தினை சீராக செயற்படுத்தி நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான குடிநீர் விநியோகத்தினை தொடர்ச்சியாக வழங்குவதற்கான வாய்ப்பும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஐக்கிய அரபு இராச்சியம், இலங்கை வர்த்தகக் கண்காட்சி தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது. இந்த வர்த்தகக் கண்காட்சி ஒக்டோபர் 20 முதல் 29 வரை ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள RAK கண்காட்சி மையத்தில் நடைபெறும்.

# பத்மா இளங்கோவனின் மூன்று நூல்கள் வெளியீடு!




பிரான்ஸில் வாழும் மூத்த படைப்பாளிகளில் ஒருவரான பத்மா இளங்கோவனின் மூன்று நூல்கள் அறிமுக நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நாளை (29) மாலை 4.30 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஞானம் பதிப்பக வெளியீடாக வந்துள்ள 'சிறுவர் இலக்கிய நுட்பங்கள்', 'சிறுவர் தமிழ் அமுதம்', 'கொரோனாவின் தடங்களில்' ஆகிய நூல்கள் அறிமுகமாகவுள்ளன.

பாலர் கல்வியில் விசேட பயிற்சிபெற்ற முன்னாள் ஆசிரியரான பத்மா இளங்கோவன், கல்லூரி நாட்களிலேயே ஒரு படைப்பாளியாகத் தன்னை இனங்காட்டியவர்.

அன்றுதொட்டு சிறுவர் பாடல்கள், கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றைப் பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதிவருபவர். தமிழகத்திலும் சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக விருதளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

சிறுவர் இலக்கிய வரிசையில் பத்து நூல்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமதி வானதி காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நூல் அறிமுக நிகழ்வில், மூத்த பத்திரிகையாளர் வீ.தனபாலசிங்கம், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர், சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பார். நூல் வெளியீட்டுரையை 'ஞானம் பதிப்பக' அதிபர் தி.ஞானசேகரன் வழங்கவுள்ளார்.

நூல் அறிமுகவுரையை வி.ரி.இளங்கோவன் வழங்குவார். நூல் குறித்த கருத்துரைகளை டாக்டர் ரஞ்ஜினி சுப்ரமணியம், ராணி சின்னதம்பி, சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, காரைக்கவி கு.பத்மானந்தன் ஆகியோர் வழங்குவர்.

நன்றியுரையை கே.பொன்னுத்துரை வழங்குவார். ஞானம் பதிப்பகம், முன்னோடிகள் இலக்கிய வட்டம் (பாரிஸ் – கொழும்பு) ஆதரவில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

# ஈரானின் கலாசார அதிகாரி - இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் சந்திப்பு





இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக், ஈரானின் கலாசார அதிகாரியை சந்தித்தார்.

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் இலங்கைக்கான ஈரான் நாட்டின் கலாசார அதிகாரி Dr. Bahman Moazamiயை ஈரான் கலாசார மையத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார்.

இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள், அதில் பிரதானமாக இளைஞர்கள் முகங்கொடுக்கும் சவால்கள், இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் மற்றும் அரசியல், தலைமைத்துவத்துறையில் இன்றைய இளைஞர்களின் ஈடுபாடு குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலின்போது ஈரான் நாட்டின் கலாசார அதிகாரி குறிப்பிடுகையில்,

இலங்கையில் இருப்பதைபோன்றே ஈரானிலும் இளைஞர் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கிறது. ஈரான் இலங்கையில் அதிகளவான சமூக கலாசார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது, முக்கியமாக கல்வித்துறையை ஊக்குவிக்கும் முகமாக புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது, மேலும் பாரசீக மொழியை இலங்கை பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான செயற்பாடுகளை செய்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாக மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.





எம்பிலிபிட்டிய கல்வி வலயத்தில் இயங்கும் சூரியகந்தை எக்பர்த் தமிழ் மகா வித்தியாலயத்தின் அமுத விழா அதிபர் எஸ்.குமுதினி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், பாடசாலையின் முன்னாள் அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கான கௌரவமும் இடம்பெற்றது.



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# நாணய மாற்று விதம் (27.04.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 206.1787 | 218.7007 |
| கனேடியன் டொலர் | 228.5988 | 242.4155 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.5459 | 48.0816 |
| யூரோ | 345.9809 | 364.7276 |
| ஜப்பான் யென் | 2.3424 | 2.4686 |
| சிங்கப்பூர் டொலர் | 234.0382 | 247.4794 |
| ஸ்ரேலிங் பவுன் | 390.7950 | 411.2509 |
| சுவிஸ் பிராங் | 349.8779 | 371.6196 |
| ஐ.அ. டொலர் | 313.8324 | 328.7701 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853.0798 |
| குவைட் | குவைட் தினார் | 1,050.4684 |
| ஓமான் | ஓமான் றியால் | 835.3654 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.0124 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.7423 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரப இராச்சிய திர்ஹம் | 87.5834 |



கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஹிலால் வித்தியாலயத்தின் வித்தியாரம்ப விழா பாடசாலை அதிபர் யூ.எல்.நாசர் தலைமையில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்றது. கிழக்கு மாகாண பிரதம கணக்காய்வாளர் எச்.எம்.எம்.றசீட் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மாலிக் கௌரவ அதிதியாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் அஸ்மா மாலிக் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

(மாளிகைக்காடு செய்தியாளர்)



தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு நாள் புதன்கிழமை (26) திருகோணமலையில் அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட இளைஞர் அணி ஏற்பாடு செய்த நினைவுப் பேருரையை கிழக்குப் பல்கலைக்கழக அரசியல்துறை பேராசிரியர் என்.புஸ்பராசா நிகழ்த்தினார். இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் எஸ்.குகதாசன் மற்றும் பொருளாளர் வெள்ளத்தம்பி சுரேஷ்குமார் மற்றும் உப்புவெளி பிரதேச சபை முன்னாள் தலைவர் டொக்டர் ஈ.ஜி.ஞானகுணாளன் என பலரும் கலந்துகொண்டனர்.

(அப்துல்சலாம் யாசீம்)

# 30 வருடங்களாக பூட்டப்பட்டிருந்த மட்டக்களப்பு சிங்கள மகா வித்தியாலயம் மீள்புனரமைக்கப்பட்டு திறந்துவைப்பு







(வெல்லாவெளி, புளியந்தீவு, கிரான், கிண்ணியா செய்தியாளர்கள், மட்டக்களப்பு)

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மக்களிடையே நிலவிய அச்சம் மற்றும் சமாதானமற்ற நிலை நிலவிய காலகட்டத்தில், சுமார் 30 வருடங்களாக பூட்டப்பட்டிருந்த மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயம் மீள் புனரமைப்பு செய்யப்பட்டு கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத யஹம்பத்தினால் மாணவர்களின் கற்றல் தேவைக்காக வியாழக்கிழமை (27) காலை திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்வி வலயம் மண்முனை வடக்கு கோட்டத்தில் அமைந்துள்ள மும்மொழிப் பாடசாலையான சிங்கள மகாவித்தியாலயம் கடந்த 30 வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பூட்டப்பட்டிருந்த நிலையில், தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத யஹம்பத் மற்றும் கிழக்கு மாகாண கல்வியமைச்சர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் ஆகியோரின் கூட்டு முயற்சியின் பயனாக இப்பாடசாலை திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண கல்வியமைச்சரின் அழைப்பின் பிரகாரம், மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பாடசாலைக்கான நினைவுப்படிவம் திரைநீக்கம் செய்யப்பட்டு நாடா வெட்டி வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

இதன்போது விசேடமாக ஆளுநரின் கரங்களால் புதிய மாணவர்கள் சேர்வு இடாப்பில் பதிவுசெய்யப்பட்டு பாடசாலைக்கு இணைக்கப் பட்டார்கள்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பீ.எஸ். ரத்நாயக்கவும், மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பீ.மடநாயக்க, கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், மக்கள் வங்கியின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் ஈ.பீ.ஏ.சிசிரகுமார ஆகியோர் விசேட அதிதிகளாகவும், மதத்தலைவர்கள், கிழக்கு மாகாண உயரதிகாரிகள், வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டு பாடசாலையை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்து மாணவர்கள் கற்றல்தேவைக்காக கையளித்தார்கள்.

இப்பாடசாலை தற்போது நாட்டில் இனங்களுக்கிடையில் சாந்தியும் சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்படுத்தப்பட்டு சுமுகமான நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மீண்டும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிதி மூலம் மீள்புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

இப்பாடசாலைக்கான அனைத்து வசதிகளையும், பௌதீக வளங்களையும் நிறைவேற்றித் தருவதாக கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் உரையாற்றும்போது தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



பொத்துவில் மினாறுல் உலூம் வித்தியாலயத்தின் வித்தியாரம்ப விழா பாடசாலை அதிபர் எம்.ஏ.தாஜஹான் தலைமையில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றது. இதன்போது அல்ஹாபிழ் மௌலவி எம்.ஏ.அப்துல் சலாம் (பாசி) கல்வியின் மகத்துவம் பற்றிய சொற்பொழிவை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஏ.பதூர்கான், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் காலிதீன், ஆதம்பாவா மௌலவி (மதனி), சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.யூ.ஏ.சமட் உள்ளிட்ட பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

(பொத்துவில் செய்தியாளர்)

# தபால் அதிபராக பைசர் நியமனம்



(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

கல்முனை பிரதான தபாலகத்தின் பிரதம தபால் அதிபராக தபால் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் யூ.எல்.எம்.பைசர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தமது கடமைகளை வியாழக்கிழமை(27) பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். 1991ஆம் ஆண்டு இத்திணைக்களத்தில் தபால் அதிபராக இணைத்துக்கொள்ளப்பட்ட இவர், கொழும்பு, அம்பாறை, சாய்ந்தமருது, பாலமுனை, கல்முனை, நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று போன்ற இடங்களிலும் தபால் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

தபால் திணைக்களத்தில் 32 வருட கால அனுபவத்தைக்கொண்டுள்ள இவர், பிரபல சிங்கள, தமிழ் மொழி பெயர்ப்பாளராவார். இதேவேளை, இவர் இதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.




ஏ.எச்.ஆர்.சி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு சிங்கள மொழி ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கு வியாழக்கிழமை (27) திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ மற்றும் சட்டத்தரணி சுரேன் பெரேரா ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டிருந்தனர்.

(கந்தளாய், நிலாவெளி செய்தியாளர்கள்)

# காத்தான்குடி பொது நூலகத்தில் நோன்புப் பெருநாள் நிகழ்வு





(காத்தான்குடி செய்தியாளர்)

புனித நோன்புப் பெருநாள் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி நகர சபையின்கீழ் இயங்கிவரும் பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான நோன்புப் பெருநாள் கொண்டாட்ட நிகழ்வு புதன்கிழமை (26) நூலகத்தின் சிறுவர் பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர்களின் திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், பரிசில்களும் வழங்கப்பட்டன.

காத்தான்குடி நகரசபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீனின் வழிகாட்டலின்கீழ் பொது நூலக மேற்பார்வையாளர் ஏ.எல்.அப்துல் ஹாதி (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நகரசபை உத்தியோகத்தர்கள், நூலக உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நாட்காட்டியில் தினங்களை கூறி வியக்க வைக்கும் மாணவன்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் தரம் 4இல் கல்வி கற்கும் நிஜாம் முஹம்மட் சாக்கிப் என்ற மாணவன் நாட்காட்டியில் தினங்களை அபார ஞாபகசக்தியினூடாக இனங்காணும் ஆற்றலைப் பெற்று அதனூடாக பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பழைய மாணவர்கள் உட்பட பாடசாலை சமூகம் பாராட்டுவதுடன், எதிர்காலத்தில் அம்மாணவன் ஒரு விஞ்ஞானியாக வருவதற்கு விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.





சாய்ந்தமருது கமு/கமு/மல்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் தரம் 1 க்கு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா பாடசாலை அதிபர் எம்.சீ.நஸ்லின் றிப்கா அன்சார் தலைமையில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்றது. இந்நிகழ்வில், தரம் 2 மாணவர்களால் மாலை அணிவித்து தரம் ஒன்று மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

(பொலிவேரியன் செய்தியாளர்)





அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் ஜூனியர் கல்லூரியின் தரம் 01 மாணவர்களின் வித்தியாரம்ப விழா கல்லூரி முதல்வர் எஸ்.றினோஸ்டீன் தலைமையில் புதன்கிழமை (26) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது IPHS Campus நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பொறியியலாளருமான என்.டீ.ஹமீட் அலியினால் கல்லூரியின் நீண்ட நாள் தேவைப்பாடாக இருந்த மின் பிறப்பாக்கி ஜெனரேட்டர் வழங்கப்பட்டதுடன், மேலும் அதிதிகளால் மாணவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டு அதிதிகள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)





தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வித்தியாரம்ப நிகழ்வு வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள 60 பாடசாலைகளில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்றது. மருதமுனை அல்-ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் அதிபர் எம்.எல்.ஏ.மஹ்றூப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

(பெரியநீலாவணை செய்தியாளர்)

# தடைப்பட்டியலில் உள்ள ஆறு முஸ்லிம் அமைப்புகளின் தடை நீக்கத் தீர்மானம்: விரைவில் வர்த்தமானி அறிவித்தல்

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் உறுதியளித்ததாக ஹரீஸ் எம்.பி. அறிவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

பாதுகாப்பு அமைச்சின் தடைப்பட்டியலில் உள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புகள் மீதான தடையை நீக்குவதற்குத் தேவையான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுள்ளதாகவும் தம்மிடம் தெரிவித்ததாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ் ,இசாக் ரஹ்மான் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பு புதன்கிழமை(26) பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதன்போது குறித்த 6 அமைப்புகளின் தடைநீக்கம் குறித்து கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இவ்வாறு உறுதியளித்ததாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவ்வமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் அண்மையில் கலந்துரையாடிய விடயங்களை பற்றி விளக்கி இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைத்த நாங்கள், இவ்விடயத்தின் அவசியம் குறித்தும் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தோம். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாங்கள் முன்வைத்த வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் இதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டதுடன் தடை செய்யப்பட்டவற்றில் 6 அமைப்புகள் எவ்வித பயங்கரவாத சம்பவங்களுடனோ பயங்கரவாத அமைப்புகளுடனோ தொடர்பை கொண்டிருக்கவில்லை.

எனவே, இவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமென நானும் அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இஷாக் ரஹ்மானும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எமது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். இதனடிப்படையில் தடை செய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர். மேலும், குறித்த 6 முஸ்லிம் அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சினால் சில ஆவணங்கள் கோரப்பட்டு அந்த ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 6 அமைப்புகள் மீதான தடையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# பாலமுனை பிரதேச பாதிப்பு தொடர்பில் கலந்துரையாடல்



(பாலமுனை செய்தியாளர்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய எல்லை நிர்ணயம் தொடர்பாக தேசிய எல்லை நிர்ணயக்குழு வெளியிட்ட நகலில் பாலமுனை பிரதேசத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை சீரமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை(27) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எப்.நஜிஹா முஸாபிர், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜவ்பர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம்.எல்.எம்.பாரீன், பாலமுனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.எல்.அலியார், பாலமுனை அனைத்து ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய எல்லை நிர்ணயம் தொடர்பாக தேசிய எல்லை நிர்ணயக்குழு வெளியிட்டுள்ள புதிய நகலில் அட்டாளைச்சேனை அறபா வட்டாரத்துடன் பாலமுனை 2ஆம் பிரிவு கிராம சேவகர் பிரிவை இணைத்துள்ளமை தொடர்பான விடயத்துக்கு தீர்வு பெற்றுத்தருமாறு கோரி பிரதேச செயலாளரிடம் இதன்போது மகஜரும் கையளிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் ஆணையாளர் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கான மகஜரின் பிரதிகளும் பிரதேச செயலாளரிடம் இதன்போது ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனைக்கு நியமனம் பெற்ற வைத்திய உத்தியோகத்தர்களுக்கான அறிமுக நிகழ்வு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

புதிதாக நியமனம் பெற்ற வைத்திய உத்தியோகத்தர்களுக்கான அறிமுக நிகழ்வும் சேவை நிலையங்களுக்கான கடிதம் வழங்கலும் செவ்வாய்க்கிழமை(25) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். ரிபாஸின் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதிப்பணிப்பாளர், பிரிவுத்தலைவர்கள், வைத்திய அத்தியட்சகர்கள், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்குபற்றியதுடன் தத்தமது பிரிவு தொடர்பான விபரங்களையும் பணிமனை மற்றும் வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டங்கள், கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்களையும் வழங்கினர்.

இதன்போது உரையாற்றிய பணிப்பாளர், வைத்தியர்கள், பொதுமக்களுக்கு எவ்வாறு சேவையை வழங்க வேண்டும் என்பது பற்றி வலியுறுத்தியதுடன் பிரிவுத் தலைவர்களும் தத்தமது பிரிவுகளினால் முன்னெடுக்கப்படுகின்ற சேவை தொடர்பான விபரங்களையும் தாம் எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு உங்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும் தமது கருத்துகளை வழங்கியிருந்தார்கள்.

இந்நிகழ்வில் விசேடமாக வைத்திய அத்தியட்சகர்கள் பங்குபற்றி தத்தமது வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் குறித்தும் மருந்து தட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் நோயாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற சேவைகள் தொடர்பிலும் கருத்துகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதான ஊடகவியலாளர் வழக்கிலிருந்து விடுதலை


(வாழைச்சேனை செய்தியாளர், கனகராசா சரவணன்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வாழைச்சேனை, கிண்ணையடியைச் சேர்ந்த ஊடகவியலாளர் முருகுப்பிள்ளை கோகிலதாசன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் இதுதொடர்பான வழக்கு நேற்று வியாழக்கிழமை(27) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் திணைக்கள அறிக்கைக்கிணங்க குறித்த நபர் விடுதலை செய்யப்பட்தாக அவர் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் மற்றும் சட்டத்தரணி ரணித்தா ஆகியோரின் ஆலோசனையின்பேரில் சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணி பி.ஜேசிங்கம் மன்றில் ஆஜராகியிருந்தார்.

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நினைவேந்தல் நிகழ்வான மாவீரர் நிகழ்வு தொடர்பான பதிவினை முகநூலில் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி வாழைச்சேனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து ஒரு வருடமும் 5 மாதங்களும் மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந் த நிலையில் 2022 மார்ச் 07ஆம் திகதியன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே குறித்த வழக்கு நேற்று (27) நகர்த்தல் பத்திரம் மூலம் விசாரணைக்கு எடுக்கப்பட்டு வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.




இவரது விடுதலைக்காக சர்வதேச ,உள்ளூர் சமூக அமைப்புகள் மற்றும் ஊடக அமைப்புகள் குரல் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# அபராதம்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மது போதையில் பொதுசமாதானத்தை சீர்குலைத்தவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார், சந்தேக நபரை கைது செய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை(27) ஆஜர் படுத்தியபோது குறித்த நபருக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

# திருகோணமலையில் டெங்கு நோயாளர்கள் அடையாளம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறும் சுகாதாரப் பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கிழக்கு மாகாண தொற்று நோய் வைத்திய நிபுணர் எஸ்.அருள்குமரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் மாத்திரம் சுமார் 600க்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் ஏப்ரல் மாத காலகட்டத்தில் கிழமைக்கு 25 பேர்வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக திருகோணமலை நகரத்தை அண்டிய பகுதிகளில் 325 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, உப்புவெளிப் பிரதேசத்தில் 6 வயது சிறுமி ஒருவர் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை பிரதேசத்தில் குறிப்பாக திருகோணமலை நகரப்பகுதி, உப்புவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதி மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் நன்னீரில் மட்டுமே உற்பத்தியாகும் திறன் கொண்ட டெங்கு நுளம்பின் பெருக்கத்தை தடுக்கவேண்டுமாயின் நன்னீரை பயன்படுத்தும் பொது மக்கள் தேக்கி வைக்காமல் அடிக்கடி மாற்றம் செய்து தேங்கி நிற்கக்கூடிய கொள்கலன்கள், பாத்திரங்களை அழித்து பெருக்கத்தை தடுக்க முயற்சி செய்யவேண்டும் என்றார்.

இந்நோயின் தாக்கத்துக்குள்ளாகிய வெளியூர் நபர்கள் உள் நுழைவதாலும் மற்றும் படையினர் வெளியூர்களுக்கு போய்வருவதாலும் இந்நோய்க்குள்ளாகப்படும் நிலையில் உள்ளூர்வாசிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இவ்விடயத்தில் பொது மக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றார்.

## போடியார் புலம்பல்!



புலிகள 2009, ஆண்டோட அழிச்சிப்போட்டன் எண்டு பால்சோறும் கட்டச்சம்பலும் கொடுத்து கொண்டாட்டம் நடத்தின சிங்கள எம்.பி.மார் இப்ப 14, வருஷம் கடந்தும் புலிகள அடிக்கடி கதைத்து அவங்களுக்கு அரிச்சின போடாமல் உடமாட்டாணுகள் எலுவா..? மட்டக்களப்பு எம்.பி. பொடியன் சாணக்கியன புலிகள் எண்டு சிங்கள எம்.பி.கள் பாராளுமன்றத்தில சொன்னத பார்தால் ஆரு புலி ஆரு எலி எண்டதுகூட இந்த மோட்டு சிங்கள எம்.பி. மாருக்கு தெரியாமல் இருக்கிறபாத்தா சிரிப்பு சிரிப்பா வருகுது எலுவா..?

# சவூதி அரசின் மனிதாபிமான செயல் வரவேற்கத்தக்கது

## தௌபீக் எம்.பி. நன்றி தெரிவிப்பு



(அப்துல்சலாம் யாசீம், கந்தளாய் செய்தியாளர்)


சவூதி அரேபியாவின் மனிதாபிமான நடவடிக்கை வரவேற்கத் தக்கதுடன் பாராட்டத்தக்க விடயமுமாகும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

சூடானின் உள்நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் 62 நாடுகளைச்சேர்ந்த 2ஆயிரத்து 148 பேரை மீட்டெடுக்க சவூதி அரேபிய அரசாங்கம் இரவுபகலாக காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து அவர்களை மீட்டெடுத்துள்ளது.

போரில் நிர்க்கதியான வெளிநாட்டவர்களை விசேட விமானங்கள், விமானப்படை விமானங்கள் மற்றும் கப்பல்கள் மூலம் பாதுகாப்பான முறையில் சவூதி அரேபியாவுக்கு அழைத்து வந்து உணவு, மருந்து மற்றும் தங்குமிட வசதிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் ஏற்பாடு செய்துள்ளதுடன் அவர்களை சொந்த நாடுகளுக்கு பாதுகாப்பான முறையில் அனுப்பி வைக்கவும் சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறது.

சூடானில் நிர்க்கதியான இலங்கையர்களையும் அழைத்து வந்தது மட்டுமல்லாமல், சவூதியில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடனும் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க சகல விதமான ஏற்பாடுகளையும் உடனடியாக முன்னெடுத்த சவூதி அரசாங்கத்துக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் என்றார்.

# சாய்ந்தமருதில் சுகாதாரத்துறையின் தரம் தொடர்பான பரிசோதனை நடவடிக்கை



(மாளிகைக்காடு செய்தியாளர்)


சாய்ந்தமருது மருந்தகங்கள், மருத்துவ ஆய்வுக்கூடங்கள், மருத்துவ நிலையங்கள் என்பவற்றின் தரம் மற்றும் சேவை தொடர்பில் ஆராயும் திடீர் சோதனை நடவடிக்கை செவ்வாய்க்கிழமை(25) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய, மருந்தகங்கள் கண்காணிப்பு வாரத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைத்திட்டத்தில் வியாபார அனுமதிப் பத்திரமில்லாமல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமை, மருந்தாளருக்கான தகைமைச் சான்றிதழ் இல்லாமை, போதியளவில் மருந்துகளை தேக்கிவைக்க பொருத்தமான களஞ்சிய வசதியின்மை, பொருத்தமான வெப்பநிலை பேணப்படாமை, காலாவதியான மருந்துகள் காட்சிப்படுத்தப்பட்டமை போன்ற பல்வேறு விடயங்கள் கண்டறியப்பட்டதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான விடயங்களை முன்னெடுத்துள்ளதாகவும் சிலருக்கு குறைபாடுகளை நிவர்த்திக்க கால அவகாசங்கள் வழங்கியுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த கள விஜயத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.எம்.ஜெரின், பொதுச்சுகாதார பரிசோதகர்களான எம்.என்.எம்.பைலான், ஏ.எல்.எம்.அஸ்லம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# உலக உணவுத் திட்ட உயரதிகாரிகள் மட்டு. அரச அதிபருடன் கலந்துரையாடல்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவுக்கும் உலக உணவுத் திட்ட உயரதிகாரிகள் ஆகியோருக்குமிடையிலான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை(26) இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலக உலக உணவுத் திட்டத்தின் ஒத்துழைப்புக்கான கூட்டாண்மை செயலக அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு மாவட்டத்தில் உலக உணவுத் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்ட முகாமைத்துவம் பற்றியும் இதன்போது தெளிவுபடுத்தினர்.

இதன்போது நிதிப்பதிவுகள், சமநல சேவைகள், கால்நடை, மருத்துவம் மற்றும் மீன் வளர்ப்பு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உலக உணவுத் திட்ட உயரதிகாரிகளிடம் அரசாங்க அதிபர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

உலக உணவுத் திட்டத்தை செயற்படுத்தும் போது எதிர்கொண்ட சவால்கள், பிரச்சினைகள் மற்றும் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் தொடர்பாக அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நிதி உத்தியோகத்தர் லயிஸ் ஹவோஜி, ஜனாதிபதி செயலக உலக உணவுத் திட்டத்தின் ஒத்துழைப்புக்கான கூட்டாண்மை செயலக அதிகாரி ஜி.டி.கே. லியனகே, உலக உணவுத் திட்ட உத்தியோகத்தர் பத்தும் போபிட்டிய, நிஹ்மத் முஸ்தபா, மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட கணக்காளர் எம்.வினோத், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார் மற்றும் உலக உணவுத் திட்ட நிகழ்ச்சி திட்ட உதவியாளர் பத்மரஜனி கேதீஸ்வரன் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உலகச் செய்திகள்

# உலகளாவிய பிஷப் கூட்டத்தில் பெண்கள் வாக்களிக்க போப் அனுமதி



உலகளாவிய பிஷப் கூட்டத்தில் முதன்முறையாக பெண்கள் வாக்களிக்க போப் பிரான்சிஸ் அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த காலங்களில் போப்பாண்டவரின் ஆலோசனை அமைப்பான சினோட்களில் பெண்கள் தணிக்கையாளர்களாக கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டபோதிலும், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை.

இந்நிலையில், போப் பிரான்சிஸ் அளித்துள்ள ஒப்புதல் மூலமாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள உலகளாவிய பிஷப் கூட்டத்தில் 5 அருட்சகோதரிகள் வாக்களிக்க அனுமதிக்கப்படவுள்ளனர்.

பல ஆண்டுகளாக ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலுள்ள பெண்கள் வாக்களிக்கும் உரிமை கோரி போராடி வந்த நிலையில், போப் பிரான்சிஸின் இந்த முடிவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# பென்சில்வேனியாவில் தீபாவளி பொது விடுமுறையாக அறிவிப்பு



அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் இனி தீபாவளியன்று பொது விடுமுறை அளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்துகளின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. வாழ்விலுள்ள தீமைகள் அகன்று, நன்மைகள் பெருகும் பெருநாளாக இந்து மக்களால் இந்தப் பண்டிகை மதிக்கப்படுகிறது.

இலங்கை, இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகளவில் வசிக்கும் இந்து மக்களும், பிற மதத்தினரும் தீபாவளியை கொண்டாடுவது வழக்கம். அமெரிக்காவில் கடந்த ஆண்டு வெள்ளை மாளிகையில் அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் தீபாவளி கொண்டாடியிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் ஆண்டுதோறும் தீபாவளிக்கு பொது விடுமுறை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பென்சில்வேனியாவில் தெற்காசியாவைச் சேர்ந்த 2 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடிவரும் நிலையில், இந்தப் பண்டிகையை முன்னிட்டு பொது விடுமுறை வழங்குவதற்கான சட்டத்தை அம்மாகாண மேலவையில் செனட்டர்கள் கிரெக் ரோத்மேன் மற்றும் நிகில் சவல் அறிமுகப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து இந்தச் சட்டம் பென்சில்வேனியா மாகாண மேலவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை செனட்டர் நிகில் சவல் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இதன்மூலம் அங்கு தீபாவளிப் பண்டிகை பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீவிரமடையும் சூடான் உள்நாட்டுப் போர்

# இராணுவ உதவியால் சிறையிலிருந்து தப்பிய போர்க் குற்றவாளிகள்



முன்னாள் ஜனாதிபதி ஓமர்



சூடானில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துவரும் நிலையில், போர்க் குற்றத்தில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட போர்க் குற்றவாளிகள் விடுதலையாகியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சூடானில் இராணுவம் மற்றும் துணை இராணுவத்துக்கு இடையே ஏற்பட்டுள்ள ஆட்சி அதிகார மோதல் தற்போது உள்நாட்டுப் போராக மாறியுள்ளது. இதன் காரணமாக சூடானில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில், சர்வதேச நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட போர்க் குற்றவாளிகளான சூடானைச் சேர்ந்த அஹமத் ஹருனும், முன்னாள் ஜனாதிபதி ஓமர் அல்-பஷிரும் சூடான் சிறையிலிருந்து வெளியேறியமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் இருவரும் கோபர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அந்தச் சிறை உடைக்கப்பட்டு இருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், இராணுவத்தினரே இருவருக்கும் உதவியதாகவும் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இதுகுறித்து போர்க் குற்றவாளியான அஹமத் வெளியிட்டுள்ள வீடியோவில்,

''நாங்கள் சிறையிலிருந்து வெளியேறிவிட்டோம். நாட்டில் மீண்டும் நீதித்துறை செயற்படும்போது நாங்கள் நேரில் ஆஜராகத் தயாராகவுள்ளோம்'' எனத் தெரிவித்துள்ளார். இவர் மீது ஏராளமான கொலைக் குற்றச்சாட்டுகளும், மனித உரிமை மீறல் வழக்குகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதியும், சர்வாதிகாரியுமான உமர் அல்-பசீர், 1989ஆம் ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டுவரையில் சூடானை ஆட்சி செய்தபோது, பொதுமக்களுக்கு எதிரான படுகொலைகளை நிகழ்த்தியதாக சர்வதேச நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து, தலைநகர் கார்ட்டூமிலுள்ள சிறைச்சாலையில் உமர் அடைக்கப்பட்டார்.

தற்போது இராணுவத்தினருக்கும் துணை இராணுவத்தினருக்கும் இடையே மோதல் நிகழ்ந்துவரும் நிலையில், 79 வயதான உமரின் உடல்நிலையை கருத்திற்கொண்டு அவரை இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றியிருப்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சூடான் தலைநகர் கார்ட்டூமிலுள்ள உயிரியல் ஆய்வகத்தை மோதலில் ஈடுபட்டுள்ள ஒருதரப்பு கைப்பற்றியுள்ளதால், அங்கிருந்து ஆராய்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ள நுண்ணுயிரிகளால் ஆபத்து ஏற்படலாம் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கையில், ஆய்வகத்துக்குள் வல்லுநர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன், உயிரியல் பொருட்கள் மற்றும் ஆய்வகத்தில் பொருட்களையும் போராட்டக்காரர்கள் பாதுகாப்பாக வைக்காமலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வகத்தில் ஜெனரேட்டர் வசதி இல்லாததால், இரத்த கையிருப்புகள் கெட்டுப்போக வாய்ப்புள்ளதாக ஆய்வக ஊழியர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, இருதரப்பு மோதலில் 512இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 4,000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், சூடானில் சிக்கியுள்ள தங்கள் நாட்டு மக்களை மீட்க சம்பந்தப்பட்ட நாட்டின் தலைவர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சூடானில் வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் ஊழியர்களை வீதி, விமானம் மற்றும் கடல் மார்க்கமாக பத்திரமாக வெளியேற்றும் நடவடிக்கையில் அந்தந்த நாடுகள் ஈடுபட்டுள்ளன.

# ஈரானிய மதகுரு சுலைமானி சுட்டுக்கொலை



அப்பாஸ் அலி சுலைமானி

ஈரான் சக்திவாய்ந்த மதகுருவாக கருதப்பட்ட அப்பாஸ் அலி சுலைமானி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஈரான் ஜனாதிபதியை நியமனம் செய்யவும், பதவிநீக்கம் செய்யவும் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவில் ஒருவரான அப்பாஸ் அலி சுலைமானி, ஜனாதிபதி அயதொல்லா கமேனியின் நம்பிக்கைக்குரியவராக வலம் வந்தார்.

இந்நிலையில், பபோல்ஸர் (Babolsar) நகரிலுள்ள வங்கிக்கு சுலைமானி சென்றபோது, மர்ம நபர் ஒருவர் பாதுகாவலரிடமிருந்த துப்பாக்கியை பறித்து சுலைமானியை சுட்டுக்கொன்றுள்ளார். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் உடனடியாக கைதுசெய்யப்பட்டார்.

# செல்லும் இடமெல்லாம் சார்ள்ஸுக்கு எதிர்ப்பு



பிரித்தானியாவின் லிவர்பூல் நகருக்கு மன்னர் சார்ள்ஸ் மற்றும் ராணி கமிலா ஆகியோர் சென்றபோது கூட்டத்திலிருந்தவர்கள் ''நீங்கள் என்னுடைய மன்னர் அல்லர்'' என்று முழக்கமிட்டனர். இதனால் மன்னர் சார்ள்ஸ் அதிர்ச்சியடைந்தார்.

எதிர்வரும் மே 6ஆம் திகதி மன்னராக சார்ள்ஸ் முடிசூடப்படவுள்ளார்.

70 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் பாரம்பரிய விழா என்பதால் லண்டன் நகரம் இப்போதிலிருந்தே விழாக்கோலம் பூண்டு வருகிறது. முடிசூட்டு விழாவின்போது லண்டன் வீதிகளில் சிறப்பு விருந்து, கச்சேரி உள்ளிட்டவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவரது அரியணையை ஏற்காத பலர் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அண்மையில் சார்ள்ஸ் மீது முட்டை வீச்சு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆட்டநாயகன் விருதை என் குழந்தைக்கு சமர்ப்பிக்கிறேன்

## – தமிழக வீரர் வருண் நெகிழ்ச்சி



புதிதாக பிறந்திருக்கும் என் குழந்தைக்கு தன்னுடைய ஆட்டநாயகன் விருதை சமர்ப்பிப்பதாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் சுழற்பந்து வீச்சாளரான தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. கொல்கத்தா அணியின் இந்த வெற்றிக்கு முக்கிய காரணம், அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி முக்கியமான 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதேயாகும்.

இதனால் அவருக்கு இந்தப் போட்டிக்கான ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. போட்டியின் நிறைவுக்குப் பிறகு தொகுப்பாளரிடம் பேசிய வருண் சக்கரவர்த்தி, புதிதாக பிறந்துள்ள தனது மகனுக்கும் மனைவிக்கும் இந்த ஆட்டநாயகன் விருதை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார். அத்துடன், புதிதாக பிறந்த தன்னுடைய குழந்தையை தான் இன்னும் பார்க்கக்கூட செல்லவில்லை என்று வருண் சக்கரவர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

# மதுஷ்க – மெண்டிஸ் சாதனை இரட்டை சதம்

## பல சாதனைகளால் அலங்கரிக்கப்பட்ட காலி மைதானம்



அயர்லாந்து அணியுடனான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 704 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்ததுடன், இலங்கை அணி வீரர்களும் பல சாதனைகளைப் படைத்தனர்.

முன்னதாக அயர்லாந்து அணி முதல் இன்னிங்ஸில் 492 ஓட்டங்களைக் குவித்திருந்த நிலையில், 212 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் பதிலெடுத்தாடிவரும் அயர்லாந்து அணி, நேற்று போட்டியின் நான்காவது நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் நிசான் மதுஷ்க தன்னுடைய நான்காவது டெஸ்ட் இன்னிங்ஸில் இரட்டைச்சதத்தை (205 ஓட்டங்கள்) பதிவுசெய்தார். பிரெண்டன் குருப்புக்கு அடுத்தபடியாக 1987ஆம் ஆண்டுக்குப் பின் முதல் டெஸ்ட் சதத்தை இரட்டைச்சதமாக மாற்றிய இலங்கை வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுக்கொண்டார்.

மறுமுனையில் குசல் மெண்டிஸ் தன்னுடைய கன்னி இரட்டைச்சதத்தை பதிவுசெய்ததுடன், இலங்கை அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் அதிக சிக்ஸர்களை விளாசியவர் என்ற சாதனையை (11 சிக்ஸர்கள்) பெற்றார். வசீம் அக்ரம் 12 சிக்ஸர்களை விளாசி இந்த வரிசையில் முதலிடத்தை தக்கவைத்துள்ளார்.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை வீரர் ஒருவர் பெற்றுக்கொண்ட அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்களை குசல் மெண்டிஸ் (245 ஓட்டங்கள்) பெற்றுக்கொண்டார். அத்துடன், காலி மைதானத்தில் அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்களையும் இலங்கை அணி பதிவுசெய்திருக்கிறது. இன்று போட்டியின் இறுதி நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

TATA IPL

இன்றைய போட்டி

போட்டி இல. - 38
பஞ்சாப் எதிர் லக்னோ
நேரம் - இரவு 7.30
இடம் - மொஹாலி

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



மட்டக்களப்பு இருதயபுரம் எவர்கிறீன் மைதானத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வளர்ந்துவரும் தலைசிறந்த கழகங்களான கோல்டன்யிகள் மற்றும் எவர்கிறீன் விளையாட்டுக் கழகங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட கடினபந்து விளையாட்டு உபகரணங்கள், பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்டது. (படம் - கல்லடி நிருபர்)

# ஆசிய ஹொக்கி சம்பியன்ஷிப் தொடர் சென்னையில்

ஏழாவது ஆசிய ஹொக்கி சம்பியன்ஷிப் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதிமுதல் 12ஆம் திகதிவரை சென்னையில் நடைபெறவுள்ளது. இதன்மூலம் 16 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை குறித்த தொடர் நடைபெறவுள்ளது.

போட்டிக்காக சென்னை எழும்பூரிலுள்ள மேயர் ராதாகிருஷ்ணன மைதானம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இதில் நடப்பு சம்பியன் தென்கொரியா, முன்னாள் சம்பியன்களான இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஜப்பான், மலேசியா ஆகிய 6 நாடுகளைச் சேர்ந்த அணிகள் கலந்துகொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா இடையிலான உறவு காரணமாக பாகிஸ்தான் மற்றும் சீனா அணிகள் பங்கேற்பது உறுதியாகாமல் இருந்தது. இந்நிலையில், ஹொக்கி போட்டியில் சீனா பங்கேற்பது கடந்த ஞாயிறன்று உறுதிசெய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 3 முறை சம்பியனான பாகிஸ்தானும் பங்கேற்பதை உறுதி செய்துள்ளது.

இந்த ஆசிய கிண்ண ஹொக்கி போட்டியானது இரண்டு சுற்றுகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் இரண்டு முறை மோத வேண்டும். அதன்படி இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இரு முறை மோத வாய்ப்புள்ளது.

# மருதமுனை பிரீமியர் லீக் சுற்றுத்தொடர் நாளை ஆரம்பம்




(றாசிக் நபாயிஸ், ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை கிரிக்கெட் வரலாற்றில் மிகப் பிரமாண்ட மருதமுனை பிரீமியர் லீக் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இம்மாதம் 29, 30ஆம் திகதிகளிலும் மே மாதம் 01 மற்றும் 05ஆம் திகதிகளிலும் நான்கு நாட்கள் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் மருதமுனையைச் சேர்ந்த 10 தெரிவுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன. 7 ஓவர் 9 பேர் பங்குகொள்ளும் இத்தொடருக்கான நிரற்படுத்தலில் இறுதிப் போட்டியுடன் 24 போட்டிகள் நடைபெறவுள்ளன. இத்தொடரில் வெற்றி பெறும் அணிக்கு 40,000 பணமும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளன.

இத்தொடரின்போது பார்வையாளர்களுக்கான கிரிக்கெட் சிறப்பு போட்டி ஒன்றும் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டி நடைபெறவுள்ளது. இதில் மருதமுனையை அணியை எதிர்த்து நிந்தவூர் அணி மோதவுள்ளது.



நோன்புப் பெருநாளை முன்னிட்டு மடகஸ்கரில் வியாபார நடவடிக்கைக்குச் சென்றுள்ள இலங்கையைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர்கள் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பேருவளை வர்த்தக அணியினர் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். (படம் - பேருவளை பீ.எம்.முக்தார்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7